REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்

2022 ஏப்ரல் 28 வியாழக்கிழமை

வரு. 90 இல. 98 | Thursday 28, April, 2022 | 16 பக்கங்கள் | 30/-




பெரும்பாலான எம்.பிக்கள் என்னுடனேயே

## பெரும்பான்மை இல்லையெனில் நான் உடனே விலகி விடுவேன்

### எந்த சந்தேகமும் வேண்டாம் என்கிறார் பிரதமர்



"பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்கள் என் பக்கம்தான் இருக்கின்றார்கள். பெரும்பான்மையானவர்களின் ஆதரவு எனக்கு இருக்கும் வரை நான்தான் பிரதமர். பெரும்பான்மை ஆதரவு எனக்கு இல்லாவிட்டால் நானாகவே விலகி விடுவேன்." என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் அவர் வழங்கிய செவ்வியிலேயே இந்த விடயத்தை கூறியுள்ளார். அவர் இது தொடர்பில் மேலும் 06

## அரச ஊழியர்களது சம்பளம் குறைக்கப்படமாட்டாது

### நிதி அமைச்சின் செயலாளர் உறுதிமொழி



அரச ஊழியர்களின் சம்பளத்தைக் குறைப்பது தொடர்பில் இதுவரையில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லையென நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், அரச நிறுவனங்களுக்கான செலவினங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளதாக அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன தெரிவித்துள்ளார். இது தொடர்பான விசேட சுற்றறிக்கை 06

## கடன் நெருக்கடியை போக்க வரிகளை உயர்த்துவதே வழி

### ஆசிய, பசுபிக் துறை இயக்குநர் ஆன் மாரி



இலங்கை தனது நாணயக்கொள்கை நடவடிக்கைகளை கடுமையாக்குமாறும் அதன் கடன் நெருக்கடிகளை சமாளிக்க வரிகளை அதிகரிக்குமாறும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் துறைகளின் இயக்குனர் ஆன் மாரி வலியுறுத்தியுள்ளார். இவ்வாறு சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் துறையின் பிரதி இயக்குனர் ஆன் மாரி தெரிவித்துள்ளதாக றொய்ட்டர்ஸ் செய்தி சேவை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை தனது கடன் நெருக்கடியை சமாளிக்க 06

புதிய வேலைத்திட்டம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி

# இடைக்கால அரசாங்கம் அமைக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவிப்பு

## அனைத்துகட்சிகளுக்கும் நேற்று அழைப்பு விடுப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

**பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுடன் நாளை சந்தித்துரையாடவுள்ளதாகவும் தெரிவிப்பு**

சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்கு ஒன்றிணையுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி கட்சித் தலைவர்களுக்கு கடிதம் மூலம் இந்த அழைப்பை விடுத்துள்ளதுடன் சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்கு கொள்கை ரீதியாக தாம் இணக்கம் தெரிவிப்பதாகவும் அவர் சகல கட்சி தலைவர்களுக்கும் தெரிவித்துள்ளார்.

இந்த புதிய வேலைத் திட்டம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நாளை வெள்ளிக்கிழமை விசேட சந்திப்பு ஒன்றை நடத்துவதற்கும் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த சந்திப்பின்போது உத்தேச புதிய 06



உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்த குடும்பங்கள் மற்றும் காயப்பட்டவர்கள் 60 பேர் கொண்ட குழுவினர், பேராயர் கருதினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் ரோமிலுள்ள பரிசுத்த பாப்பரசரை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டனர். பாப்பரசர் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆசி வழங்கியபோது பிடிக்கப்பட்ட படம்.



## பயங்கரவாத தடைச் சட்டம் மிகவும் பயங்கரமானது

TNA எம்.பி இரா.சாணக்கியன் கருத்து 03

அதிகரிப்புக்கு நாம் அனுமதி வழங்கவில்லை

## மின் கட்டணத்தை நினைத்த மாதிரி அதிகரிக்க முடியாது

### பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர்



மின்கட்டணத்தை அதிகரிக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கவில்லை. நிறைவேற்றுத்துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சரின் விருப்பத்துக்கமைய மின்கட்டணத்தை அதிகரிக்க முடியாது. அத்துடன் நள்ளிரவில் 06

Gas விலை அதிகரிப்பின் எதிரொலி

## சிற்றுண்டிகளின் விலைகள் மேலும் அதிகரிக்கும் நிலை

லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதையடுத்து சிற்றுண்டிகளின் விலைகள் மேலும் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

2,675 ரூபாவாக காணப்பட்ட 12.5 கிலோகிராம் 06

## சென். ஜோசப் கல்லூரியில் தீ கட்டுப்பாட்டுக்குள்

### உயிராபத்து இல்லை கட்டடத்துக்கு சேதம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பில் பிரபல பாடசாலையான மருதானை புனித சூசையப்பர் கல்லூரியில் நேற்று திடீர் தீ அனர்த்தம் 06

## பசில், சஜித் , ரணில் மூவருக்கிடையில் பலமான அரசியல் டீல்

வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதில் ஐக்கிய மக்கள் சக்தியினர் 06

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை

## தமிழ் எம்.பிக்களை நடுநிலை வகிக்க கோருகிறார் விக்கி



தனது நிலைப்பாடு அது எனவும் தெரிவிப்பு 03

## பணம் கொடுக்காமையால் டாக்டருக்கு கத்திக்குத்து

தலங்கமையில் யாசகர் வெறியாட்டம் 03

நிதி மோசடி குற்றச்சாட்டு

## ஆங் சாங் சூகிக்கு 05 வருட கால சிறை



02

## நாடு முழுவதும் இன்று பொது வேலைநிறுத்தம்

### தேசிய தொழிற்சங்க முக்கியஸ்த்தர் வசந்த



அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று (28) 'பொது வேலை நிறுத்தம்' என்ற தொழிற்சங்க நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தேசிய அமைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அரசு, அரசு சார் நிறுவனங்கள், தோட்ட மற்றும் தனியார் 06

## இடைக்கால அரசுக்கு இணங்க மாட்டோம்

### JVP தலைவர் அனுரகுமார தெரிவிப்பு



அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஜே.வி.பியின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவளிப்பார்கள். ஆனால், ஒட்டுமொத்த மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் நீடிக்கும்வரை இடைக்கால அரசுக்கு ஜே.வி.பி. இணங்காது என 06

ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகின்

## இடைக்கால அரசுக்கு SJB ஆதரவு வழங்கும்

### கபீர் ஹாசிம் எம்.பி தெரிவிப்பு



ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகினால் இடைக்கால அரசாங்கத்தை ஆதரிப்போமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார். சரியான இடைக்கால அரசாங்கத்தை ஆதரிப்போமென அவர் குறிப்பிட்டுள்ளார். 06




சாய்ந்தமருது தற்கொலை தாக்குதலில்

## உயிரிழந்தோரின் சடலங்கள் நேற்று மீண்டும் தோண்டியெடுப்பு

### மூன்றாவது தடவையாக இன்று பிரேத பரிசோதனை



**பாறுக் ஷிஹான்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தொடர்ந்து அம்பாறை சாய்ந்தமருது பகுதியில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் டி.என்.ஏ பரிசோதனைக்காக நேற்று 06

## டொலரின் விற்பனை விலை ரூ.355 ஆக அதிகரிப்பு

ரூபாவின் மதிப்பு தினமும் சரிவு



அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் நேற்றைய தினம் அமெரிக்க டொலரை 355 ரூபாவுக்கு விற்பனை செய்தன.

நாட்டின் தற்போதைய பொருளாதார 06

## தேர் மீது மின்சாரம் தாக்கி 11 பேர் பலி

### தஞ்சாவூரில் அதிகாலை அசம்பாவிதம்



தஞ்சாவூர் அருகே களிமேடு கிராமத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற தேர்த் திருவிழாவில் மின்சாரம் தாக்கியதில் 11 பேர் பலியாகியுள்ளனர். 14 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு தஞ்சாவூர் – பூதலூர் சாலையில் 06



# சர்வதேச செய்திகள்

## பாக். தற்கொலை தாக்குதல்: சீனர் கொலைக்கு கண்டனம்



பாகிஸ்தானில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் தமது நாட்டு பிரஜைகள் மூவர் கொல்லப்பட்டதை கண்டித்துள்ள சீனா, இதில் தொடர்புபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாகிஸ்தானை வலியுறுத்தியுள்ளது.

கராச்சி பல்கலைக்கழகத்தின் கன்பூசியஸ் நிறுவகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தாக்குதலில் பாகிஸ்தான் ஓட்டுநர் ஒருவருடன் மூன்று சீன ஆசிரியர்கள் கொல்லப்பட்டனர்.

30 வயதான பெண் ஒருவரே தற்கொலை குண்டை வெடிக்கச் செய்துள்ளார்.

பலொக் விடுதலை இராணுவம் இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளது.

பாகிஸ்தானில் பெரும் முதலீடுகளை செய்து வரும் நெருங்கிய நட்பு நாடான சீனாவின் முதலீடுகள் தொடர்பில் தடை செய்யப்பட்ட பலொக் விடுதலை இராணுவம் எதிர்ப்பு வெளியிட்டு வருவதாக கூறப்படுகிறது.

'சுரண்டல் திட்டங்களை உடன் நிறுத்தும்படி பலொக் விடுதலை இராணுவம் சீனாவை மீண்டும் ஒரு முறை எச்சரிக்கிறது. இல்லாவிட்டால் எமது எதிர்காலத் தாக்குதல்கள் இதனை விடவும் மோசமாக இருக்கும்' என்று அந்த அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கன்பூசியஸ் நிறுவகம் சீனா உலகெங்கும் மேற்கொண்டுவரும் மிதமான இராஜதந்திர மூலோபாயமாக பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் தேவையின்றி வெளியே செல்லவேண்டாம் என்று இஸ்லாமாபாத்தில் உள்ள சீனத் தூதரகம் தனது நாட்டவரை எச்சரித்துள்ளது. அதுபோன்ற தாக்குதல் மீண்டும் நடக்காமல் இருப்பதையும் சீனக் குடிமக்களின் பாதுகாப்பையும் உறுதிசெய்யும்படி பாகிஸ்தானிய அதிகாரிகளிடம் அது வலியுறுத்தியது.

## நாகேந்திரன் தர்மலிங்கம் மீது மரண தண்டனை நிறைவேற்றம்



போதைக்கடத்தல் குற்றச்சாட்டுக்கு உள்ளான அறிவாற்றல் குறைபாடுடைய நாகேந்திரன் தர்மலிங்கம் மீது சிங்கப்பூர் சாங்கி சிறையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

42.7 கிராம் ஹெரொயின் போதைப்பொருளுடன் கடந்த 2010 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட நாகேந்திரன் நேற்று புதன்கிழமை சூரியோதயத்துக்கு முன்னர் தூக்கில் இடப்பட்டதாக அவரது குடும்பத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

அவரது உடல் மலேசியாவுக்கு அனுப்பப்படவிருப்பதாகவும் இபோ நகரில் இறுதிக் கிரியைகள் இடம்பெறும் என்றும் நாகேந்திரனின் சகோதரர் நவீன் குமார் தெரிவித்துள்ளார்.

34 வயதான தனது மகன் மீதான மரண தண்டனையை நிறுத்தும்படி அவரது தாய் நீதிமன்றத்தில் மேற்கொண்ட மேன்முறையீடு நிராகரிக்கப்பட்ட நிலையிலேயே மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த கடைசி நிமிட மேன்முறையீடு "தொந்தரவு" தருவதாக நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

நாகேந்திரனின் நுண்ணறிவு அளவு குறைவாக இருப்பதால் அவர் அறிவாற்றல் குறைபாடு உடையவர் என்று மருத்துவர்கள் கூறிய நிலையில் இந்த வழக்கு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது.

## உக்ரைனுக்கு ஆயுதம் அனுப்புகிறது ஜெர்மனி



ஜெர்மனி முதன்முறையாக உக்ரைனுக்குப் பெருமளவு ஆயுதங்களை அனுப்புவதாக அறிவித்துள்ளது.

ரஷ்யப் படையெடுப்புக்கு எதிராக உக்ரைனின் பாதுகாப்பை வலுப்படுத்த அது உதவியாக இருக்கும் என்று கூறப்பட்டது. ஜெர்மனி, 50 விமான எதிர்ப்புக் கவச வாகனங்களையும் உக்ரைனுக்கு அனுப்புகிறது.

இதன்மூலம் மோதல் நடைபெறும் பகுதிகளுக்கு அத்தகைய ஆயுதங்களைக் கொடுப்பதில்லை என்ற தனது கொள்கையை ஜெர்மனி தளர்த்தியுள்ளது.

உக்ரைனுக்கு மேலும் ஆயுதங்கள் வழங்குவது பற்றி சுமார் 40 நாடுகள் ஜெர்மனியில் உள்ள அமெரிக்க விமானப் படைத் தளத்தில், அவசர ஆலோசனை நடத்தியுள்ள வேளையில் பெர்லின் அது பற்றி அறிவித்துள்ளது.

போரில் வெல்ல முடியும் என்று உக்ரைன் நம்புகிறது. நட்பு நாடுகளும் சந்திப்பின்போது அதே நம்பிக்கையைப் பிரதிபலித்ததாக அமெரிக்கா கூறுகிறது.

பூசல் முடிவுக்கு வந்த பின்னர், உக்ரேனின் நீண்டகாலப் பாதுகாப்பை உறுதிசெய்யவும் நட்பு நாடுகள் பணியாற்றி வருகின்றன.

## போலந்து, பல்கேரியாவுக்கான ரஷ்யாவின் எரிவாயு நிறுத்தம்



ரஷ்யாவின் காஸ்ப்ரோம் எரிவாயு நிறுவனம், போலந்து மற்றும் பல்கேரியாவுக்கு விநியோகத்தை நிறுத்தத் திட்டமிட்டிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

காஸ்ப்ரோம் நிறுவனத்துக்கு நட்பற்ற நாடுகள், மற்ற நாணயங்களுக்குப் பதிலாக ரஷ்ய ரூபிளில் கட்டணம் செலுத்த வேண்டும் என்று ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கூறியிருந்தார். அதன் பின்னர், எரிவாயு விநியோகத்துக்கு முதன்முறையாகத் தற்காலிகத் தடை விதிக்கப்படுவதாக தெரிகிறது.

தங்களின் எரிவாயு சேமிப்புக் கிடங்குகளில் முக்கால்வாசி இருப்பு உள்ளதாகவும் தேவை ஏற்பட்டால் வேறு இடங்களிலிருந்து எரிவாயு பெற்றுக்கொள்ளத் தயாராயிருப்பதாகவும் போலந்துப் பிரதமர் கூறினார். நோர்வேயிடமிருந்து போலந்து எரிவாயுவைப் பெறக்கூடும் என்று தெரிகிறது.

ஆனால் பல்கேரியா, அதன் எரிவாயு விநியோகத்துக்கு முழுக்க முழுக்க ரஷ்யாவையே நம்பியுள்ளது. அதன் ஒரே எரிவாயுக் கிடங்கில் சுமார் 17 வீதமான இருப்பே இருந்ததாகக் கூறப்பட்டது.

பல்கேரியா, எரிவாயுக் கட்டணத்தை ரூபிளில் கட்ட மறுத்துவிட்டதா என்பது பற்றி அதன் எரிசக்தி அமைச்சு வெளிப்படையாக ஏதும் சொல்லவில்லை.

ரஷ்யா போலந்துக்கும் பல்கேரியாவுக்கும் எரிவாயு விநியோகம் செய்வதை நிறுத்தி ஐரோப்பாவை மிரட்டுகிறது என்று உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதற்கிடையே, நேட்டோ கூட்டணியின் உறுப்பு நாடான போலந்து, ரஷ்யாவுக்கெதிராக மிகக் கடுமையான தடைகளை விதிக்க முனைகிறது.

போலந்தில் இருக்கும் எரிவாயு போதிய அளவில் உள்ளது என்றும் பயனீட்டாளர்கள் கவலைப்படத் தேவையில்லை என்றும் அந்நாட்டின் எரிசக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி, ரஷ்யா, உக்ரைனின் நட்பு நாடுகளுக்கு இடையிலான ஒற்றுமையைக் கெடுக்க முனைவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ரஷ்யா, எரிசக்தி வளங்களும் ஒருவித ஆயுதம் என்பதை நிரூபிக்கிறது என்று குறிப்பிட்ட அவர், ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகள் ஒற்றுமையாகச் செயல்பட்டு ரஷ்யா மீது எரிசக்தி தொடர்பிலான தடைகளை விதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அவ்வாறு செய்வதன் மூலம் அந்நாடு எரிசக்தியை ஆயுதமாகப் பயன்படுத்த முடியாமல் போகக்கூடும் என்றும் அவர் கூறினார்.

## இஸ்ரேலிய ஏவுகணை வீச்சு: நான்கு சிரிய படையினர் பலி



சிரிய தலைநகர் டமஸ்கஸுக்கு அருகில் இஸ்ரேல் நடத்திய ஏவுகணை தாக்குதல் ஒன்றில் நான்கு சிரியப் படையினர் கொல்லப்பட்டு மேலும் மூவர் காயமடைந்ததாக சிரிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் பொருள் சேதங்கள் ஏற்பட்டதாக அந்த அமைச்சு பேஸ்புக்கில் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வடகிழக்கு இஸ்ரேலில் உள்ள டைப்ரியஸில் இருந்து இந்த ஏவுகணைகள் வீசப்பட்டதாகவும் பெரும்பாலானவை சிரிய வான் பாதுகாப்பு முறை மூலம் சுட்டுவீழ்த்தப்பட்டதாகவும் சிரிய அரச செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. எனினும் இதனை சுயாதீனமாக உறுதி செய்ய முடியவில்லை என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் கருத்து வெளியிட இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் மறுத்துள்ளார்.

இஸ்ரேலிய ஆளில்லா விமானம் ஒன்று எல்லையில் சிரியா பக்கமாக விழுந்ததாக இஸ்ரேலிய இராணுவம் கடந்த செவ்வாயன்று கூறிய நிலையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ஈரானிய ஆதரவு ஆயுதக் கிடங்குகள் மீதே இஸ்ரேலிய ஏவுகணைகள் தாக்கியதாக கண்காணிப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## ஆங் சான் சூக்கி மீது மேலும் 5 ஆண்டு சிறை



இராணுவ ஆட்சியின் கீழ் மியன்மாரின் முன்னாள் தலைவி ஆங் சான் சூக்கி மீது நீதிமன்றம் ஒன்று ஊழல் குற்றச்சாட்டில் 5 ஆண்டு சிறை தண்டனை விதித்துள்ளது. இதன்மூலம் அவரின் மொத்த சிறை தண்டனை எண்ணிக்கை 11 ஆக அதிகரித்துள்ளது.

மியன்மாரில் 2021 பெப்ரவரியில் ஜனநாயக முறையில் தேர்வான அரசுக்கு எதிராக இடம்பெற்ற இராணுவ சதிப்புரட்சி தொடக்கம் சூக்கி வீட்டுக்காவலில் இருந்து வருகிறார்.

நோபல் பரிசு வென்ற 76 வயதான சூக்கி மீது வாக்கு மோசடி உட்பட குற்றவியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

தன் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளையும் அவர் நிராகரித்திருப்பதோடு இந்த வழக்கு வெட்ககரமானது என்று உரிமைக் குழுக்கள் கண்டித்துள்ளன.

இந்நிலையில் தலைநகர் நாய் பியிடவ்வில் மூடிய அறையில் கடந்த புதனன்று இடம்பெற்ற இந்த வழக்குத் தொடர்பில் ஊடகங்களுக்கு பேசுவதிலிருந்து சூக்கியின் வழக்கறிஞர்கள் தடுக்கப்பட்டனர்.

யாங்கோனின் முன்னாள் தலைவரிடம் 600,000 டொலர் லஞ்சம் பெற்றதாகவே சூக்கி குற்றங்காணப்பட்டுள்ளார்.

## இஸ்ரேலிய படையினரால் பலஸ்தீனர் சுட்டுக்கொலை



மேற்குக் கரையில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோதலில் இஸ்ரேலிய படையினரால் பலஸ்தீனர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதோடு மேலும் மூவர் காயமடைந்தனர். மற்றொரு பலஸ்தீனர் சுட்டுக்கொல்லப்பட்ட மறுதினமே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஜெனின் நகரில் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டதாக இஸ்ரேலிய இராணுவம் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தபோதும் உயிரிழப்புப் பற்றி எந்த தகவலையும் வெளியிடவில்லை.

கடந்த மார்ச் மாதம் தொடக்கம் இஸ்ரேலில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் தாக்குதல்களை அடுத்து ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் குறிப்பாக ஜெனின் நகரைச் சூழ இஸ்ரேலிய பாதுகாப்பு படைகள் சுற்றிவளைப்புகளை நடத்தி வருகின்றன.

இதில் புர்கின் கிராமத்தைச் சேர்ந்த 21 வயதான அஹமது மசாத் என்பவரே இஸ்ரேலின் தற்போதைய தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். அவரது தலையில் சூடு நடத்தப்பட்டிருப்பதாக மருத்துவமனை அதிகாரி ஒருவர் பலஸ்தீனத்தின் வபா செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் பிற்பகுதி தொடக்கம் இதுவரை 26 பலஸ்தீனர்கள் மற்றும் இஸ்ரேலிய அரபிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

## காசாவில் பண்டைய பெண் கடவுள் சிலை கண்டுபிடிப்பு



பண்டைய பெண் கடவுளின் கற்சிலை ஒன்று காசா பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கற்சிலை 4,500 ஆண்டுகளுக்கு முன் வெண்கல யுகத்தின் பிற்பகுதியைச் சேர்ந்த கனானித் தெய்வத்தின் தலை என்று பலஸ்தீன தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காசாவின் தெற்கு பகுதியில் கான் யூனிசில் இருக்கும் விவசாயி ஒருவர் தனது நிலத்தை தோண்டியபோதே இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் கனானித் குடியேற்றம் ஒன்றாக இருந்த காசா பகுதி பண்டைய நாகரிகத்தில் முக்கிய வர்த்தகப் பாதையாக இருந்திருப்பதை இந்த சுண்ணாம்பு சிலை காட்டுகிறது.

22 செ.மீ உயரம் கொண்ட இந்த பெண் தெய்வத்தின் சிலையின் தலையில் பாம்புக் கிரீடம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. இந்த அனாத் சிலை பெரிதும் அறியப்பட்ட கனானித் தெய்வமாகும். இது தற்போது காசாவில் இருக்கும் ஒருசில அருங்காட்சியங்களில் ஒன்றாக செயல்படும் கஸ்ர் அல் பஷாவில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

## உக்ரைன் போர் மொல்டோவா நாட்டுக்குப் பரவும் நெருக்கடி



மொல்டோவா நாட்டின் ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகளின் பிராந்தியம் ஒன்றில் ரஷ்யா பதற்றத்தை தூண்டுவதாக குற்றம்சாட்டப்பட்டிருக்கும் நிலையில் உக்ரைன் போர் பிராந்தியத்தில் விரிவடையும் அச்சம் அதிகரித்துள்ளது.

மொல்டோவாவின் ட்ரான்ஸ்னிஸ்ட்ரியா பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்திருப்பது பற்றி ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளன. ரஷ்ய மொழி பேசும் இந்த பிராந்தியத்தை ரஷ்யா கைப்பற்றிய நிலையில் அங்கு ரஷ்ய படைகள் பல தசாப்தங்களாக நிலைகொண்டுள்ளன.

இந்நிலையில் மொல்டோவாவின் பாதுகாப்பு அமைச்சு, வானொலி கோபுரம் மற்றும் இராணுவப் பிரிவு ஒன்றில் இந்த வாரம் வெடிப்புகள் நிகழ்ந்துள்ளன. மெல்டோவாவில் ரஷ்ய மொழி பேசுபவர்கள் ஒடுக்கப்படுவதாக ரஷ்ய கமாண்டர் ஒருவர் கூறிய நிலையிலேயே இந்த வெடிப்புகள் இடம்பெற்றுள்ளன.

உக்ரைன் மீது பெப்ரவரி 24 ஆம் திகதி ரஷ்யா படையெடுத்த நிலையில் மொல்டோவா அடுத்த இலக்காக இருக்கும் வாய்ப்பு உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

'ட்ரான்ஸ்னிஸ்ட்ரியா பிராந்தியத்தை சீர்குலைப்பதற்கு ரஷ்யா விரும்புகிறது' என்று உக்ரைனிய ஜனாதிபதியின் உதவியாளர் ஒருவரான மகைலோ பொடொல்யாக் ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

## 'வீட்டோ' அதிகாரத்துக்கு விளக்கம் கேட்க பொதுச் சபையில் தீர்மானம்



பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள் 'வீட்டோ' எனப்படும் ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது அதை நியாயப்படுத்தக் கோரும் தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் பொதுச்சபை நிறைவேற்றியுள்ளது.

ரத்து அதிகாரத்தைக் கொண்டுள்ள 5 நாடுகளில் ஒன்றான ரஷ்யா, உக்ரைன் மீதான தனது படையெடுப்பு தொடர்பில் சபை எடுக்கக்கூடிய நடவடிக்கைகளைத் தடுத்து வந்துள்ளது.

நாடுகள் ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தும் ஒவ்வொரு முறையும் அதுபற்றி விவாதிக்கப் பொதுச்சபையில் கூட்டம் நடத்தப்பட வேண்டும். உக்ரைனியப் போர் தொடரும் வேளையில் பொதுச் சபை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. லிச்சென்ஸ்டீன் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்துக்கு அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் உட்பட சுமார் 100 நாடுகள் ஆதரவு வழங்கின.

எனினும் இந்தத் தீர்மானம் கடப்பாடற்றது என்பதால் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தும் நாடு அது பற்றி பொதுச் சபையில் விளக்கம் அளிப்பதை மறுக்கும் பட்சத்தில் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 ஏப்ரல் 28 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN



**தொழுகை நேரம்**

சுபஹ் - 04.41
ளுஹர் - 12.10
அஸர் - 03.23
மஃரிப் - 06.19
இஷா - 07.30

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் சித்திரை 15

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

மேஷம் - செலவு
ரிஷபம் - பாராட்டு
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - நிறைவு
தனுசு - வெற்றி
மகரம் - பொறுமை
கும்பம் - மறதி
மீனம் - சுகம்

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

உலக வங்கியிடமிருந்து

# இலங்கைக்கு 600 மில். அ. டொலர் நிதியுதவி

## முதற்கட்டமாக 400 மில். அ.டொ வழங்கப்படும்



பொருளாதார நெருக்கடியை சமாளிக்க உலக வங்கி 600 மில்லியன் டொலர் நிதி உதவியை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது. முதற்கட்டமாக 400 மில்லியன் டொலர்கள் விரைவில் வழங்கப்படுமென உலக வங்கியின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி திருமதி சியோ கெண்டா (Chiyo Kanda) தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குமிடையில் (26), கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போதே திருமதி சியோ கெண்டா இவ்வாறு தெரிவித்தார்.

மருந்து மற்றும் சுகாதாரத் தேவைகள், சமூகப் பாதுகாப்பு, விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்பு 06



ரமழான் சிந்தனை

## தான தர்மங்களின் சிறப்பு

இறுதித்தூதரான முஹம்மத் (ஸல்) அவர்கள் ரமழான் மாதத்தின சிறப்பையும் மகத்துவத்தையும் நன்கறிந்து கொண்டதன் அடிப்படையில் இம்மாதத்தை உயிரோட்டமாக்குவதில் அதிக ஆர்வமும் அக்கரையும் எடுத்துக் கொண்டார்கள். இதன் நிமித்தம் அன்னார் மேற்கொண்ட முயற்சிகளும் செயற்பாடுகளும் உலகம் இருக்கும் வரையும் ஒவ்வொரு இறை விசுவாசிக்கும் முன்மாதிரியாக அமைந்துள்ளன. அதனால் அன்னாரின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப இம்மாதத்தையும் பயன்படுத்திடுவது முஸ்லிம்களின் பொறுப்பாகும்.

அந்த வகையில் மனிதர்களிலேயே அதிகம் கொடை கொடுக்கக்கூடியவர்களாக இருந்துள்ள நபி (ஸல்) அவர்கள், ரமழானில் வீசும் காற்றை விடவும் வேகமாக தானதர்மங்களில் ஈடுபடக் கூடியவர்களாக இருந்துள்ளார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

மனித சமூக கட்டமைப்பானது பல் வகைமைத்தன்மை கொண்டது. அதில் எல்லா மட்டத்தினரும் ஒரே தரத்தினராகவோ, ஒரே மட்டத்திலான சொத்து, செல்வ பொருளாதார வசதிகளைக் கொண்டவர்களாகவோ இல்லை. எல்லா மட்டத்தினரிலும் வேறுபாடுகளும் ஏற்ற தாழ்வுகளும் இருக்கவே செய்கின்றன. அது அல்லாஹ்வின் ஏற்பாடாகும்.

மனிதன் பெற்றுக்கொண்டுள்ள பொருளாதார வசதி வாய்ப்புகள் உள்ளிட்ட அனைத்தும் அமானிதமானவை. அவை உரிமை கொண்டாட முடியாத அமானிதங்கள் என்பது தான் இஸ்லாத்தின் நிலைப்பாடு. அதனால் வசதி வாய்ப்பு படைத்தவர்கள் வசதி குறைந்த ஏழை எளியவர்களுக்கு உதவி, ஒத்துழைப்புகளை நல்லத் தவறக்கூடாது.

நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப ஏழை, எளிய மக்களின் பொருளாதார கஷ்டங்களை குறைக்க இப்புனித மாதத்திலும் உதவி ஒத்துழைப்புக்களை நல்குவதில் அதிக அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டும். அது வசதி குறைந்த மக்களின் பொருளாதார சுமையைக் குறைக்க உதவுவதாக அமைவதோடு அவர்களது உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் மனிதாபிமானம் மேலோங்கவும் வழிவகுக்கும்.

ஆகவே இக்காலப்பகுதியில் தான தர்மங்களை வழங்குவதில் அதிக ஆர்வம் காட்டுவதன் மூலம் நபி (ஸல்) அவர்களின் ஸுன்னாவை உயிர்ப்பித்த பெருமையை பெற்றுக்கொள்ள முடிவதோடு அல்லாஹ்வின் அன்பையும் அருளையும் அடைந்துகொள்ளவும் அது வாய்ப்பாகவும் அமையும் என்றால் மிகையாகாது.

மர்லின் மரிக்கார் ...

## ஜனாதிபதியின் தலைமையில் மீண்டும் சர்வகட்சி மாநாடு

இரண்டு கட்டங்களாக நடத்த தீர்மானம்

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் சர்வகட்சி மாநாடொன்று மீண்டும் நடைபெறவுள்ளதாகவும் இரண்டு கட்டங்களாக அதனை நடத்துவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அதற்கிணங்க, நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆளும் கட்சியிலுள்ள கட்சித் தலைவர்களுக்கான மாநாடு ஜனாதிபதியின் தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் 06

ஊழல் குற்றச்சாட்டுள்ள அரசியல்வாதிகள்

## தப்பிச் செல்வதை தடுப்பதற்கு பயணத்தடை விதிக்க வேண்டும்

சட்ட மாஅதிபரிடம் கோரிக்கை

ஊழல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் வழக்குகளை எதிர்கொண்டுள்ள முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகள் நாட்டை விட்டு தப்பிச் செல்லத் தயாராகி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், அவர்களுக்கு பயணத் தடையை விதிக்க நடவடிக்கை எடுக்குமாறு சட்ட மாஅதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணிகள் குழுவொன்று நேற்று காலை சட்ட மாஅதிபர் திணைக்களத்தில் சட்ட மாஅதிபரை சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்ததாக சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

அவர்கள் தப்பிச் சென்றால் வழக்கு நடவடிக்கைகள் தடைப்படும் எனவும், இதனூடாக பொது நிதி மற்றும் அரச சொத்துக்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் பாரியளவில் பாதிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே ஊழல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் வழக்குகளை 06

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை

## தமிழ் எம்.பிக்களை நடுநிலை வகிக்க கோருகிறார் விக்கி

தனது நிலைப்பாடு அது எனவும் தெரிவிப்பு

யாழ்.விசேட நிருபர்

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் நடுநிலைமை வகிக்க வேண்டுமென்பது தனது கருத்தென தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சீ.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.



மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை நாங்கள் கட்டாயம் ஆதரிக்க வேண்டும். ஜனாதிபதி அங்கு இருப்பதால் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடையாது. ஆனால் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்து வெளியேற்றுவதாக இருந்தால் அதற்கு பதிலாக யார் வரப் போகிறார்கள் என்ற கேள்வி உள்ளது. அதற்கு என்ன நடக்கப்போகின்றது என்பதை பார்த்துக்கொண்டே நடவடிக்கையில் இறங்கவேண்டும்.

நாட்டிலுள்ள ஸ்திரத்தன்மை இல்லாது போய் விட்டால் பொருளாதார ரீதியான மீள்கட்டுமானம் என்பது பாதிக்கப்படும். இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன என தமிழ் மக்கள் இருக்கின்றனர். 06

## இன்று பாராளுமன்றில் விசேட கட்சி தலைவர்கள் கூட்டம்

21 ஆவது திருத்தம் தொடர்பில்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் இன்று (28) பிற்பகல் 2.00 மணிக்கு பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெறும்.

அரசியலமைப்பை திருத்துவதற்கான முன்மொழிவுகள் குறித்து கலந்துரையாடுவதற்காக சபாநாயகர் இந்த கூட்டத்தை கூட்டியுள்ளதாக தெரிய வருகிறது.

பாராளுமன்றத்திலுள்ள சில கட்சிகள் மற்றும் குழுக்கள் அரசியலமைப்பை திருத்துவதற்கான யோசனைகளை சபாநாயகரிடம் ஏற்கனவே சமர்ப்பித்துள்ளன. ஐக்கிய மக்கள் சக்தியும் சுயாதீன குழுவொன்றும் சபாநாயகரிடம் அரசியலமைப்பு 06

# பயங்கரவாத தடைச் சட்டம் மிகவும் பயங்கரமானது

TNA எம்.பி இரா. சாணக்கியன் கருத்து



பயங்கரவாத தடைச்சட்டம் உண்மையில் ஒரு பயங்கரமான சட்டமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு சிறைச்சாலையில் கைதிகள் சிலரை நேற்று சந்தித்ததன் பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களைச் சந்தித்து உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்களை சந்தித்து அவர்களின் உறவினர்களின் விடுதலையை உறுதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துகிறோம்.

இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு முன்னர் நானும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் இணைந்து வடக்கு, கிழக்குக்கு வெளியே பாரிய வேலைத்திட்டத்தை முன்னெடுத்தோம் என்றார்.

## பணம் கொடுக்காமையால் டாக்டருக்கு கத்திக்குத்து

தலங்கமையில் யாசகர் வெறியாட்டம்

பணம் கொடுக்க மறுத்த மருத்துவர் ஒருவரை யாசகர் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்த சம்பவமொன்று நேற்று முன்தினம் இரவு தலங்கமையில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் (26) இரவு பல்பொருள் அங்காடிக்கு அருகில் ஒருவர் விழுந்து கிடந்துள்ள நபர் தலங்கம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மாலபே, பொத்துஅராவ வீதியில் வசிக்கும் 57 வயதுடைய நபரென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பல்பொருள் அங்காடியிலிருந்து வெளியேறும் போது அருகிலிருந்த யாசகருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தில் யாசகர் கூரிய ஆயுதத்தால் குத்தி கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளதுடன், அவரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சகல கட்சிகளுடன் பேச சுயாதீன எம்.பி குழு முடிவு

இடைக்கால அரசு தொடர்பில்

சர்வகட்சிகள் உள்ளடங்கிய இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கான யோசனை தொடர்பில் எதிர்வரும் தினங்களில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாட இருப்பதாக ஆளும் தரப்பு சுயாதீன குழு தெரிவித்துள்ளது.

சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பிரதமர் பதவி விலகினால் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வர வேண்டிய அவசியமில்லையென பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். 06

## அரசு நிறுவனங்களின் வருமானம் திறைசேரிக்குக் கிடைக்க வேண்டும்

கோப் குழுவின் தலைவர்



அரச நிறுவனங்களின் வருடாந்த வருமானம் அரச திறைசேரிக்கு உரிய முறையில் கிடைக்க வேண்டுமென கோப் குழுவின் தலைவர் (பேராசிரியர்) சரித ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 2021 ஆம் ஆண்டில் செயற்பாட்டு இலாபமாக 1.4 பில்லியன் ரூபாய் (1,496,155,864) ஈட்டியிருந்தாலும், 100 மில்லியன் ரூபாய் 06

# இலங்கைக்கு மனிதாபிமான உதவி வழங்க I.C.R.C தயார்

அமைச்சர் பீரிஸிடம் தூதுக்குழு தலைவர் உறுதி

அரசாங்கத்தின் தேவைகளின் அடிப்படையில் மனிதாபிமான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தூதுக் குழுவின் தலைவர் லூக்காஸ் பெட்ரிடிஸ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தூதுக் குழுவின் தலைவர் லூக்காஸ் பெட்ரிடிஸ், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை (25) அமைச்சில் பிரியாவிடை நிமித்தம் சந்தித்தார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வழங்கிய பங்களிப்பை அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் பாராட்டினார். மோதல் சூழ்நிலையின் போது கடந்த காலத்தில் ஆற்றிய முக்கிய 06



**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 240.20 | 251.23 |
| கனடியன் டொலர் | 263.20 | 274.07 |
| யூரோ | 362.94 | 374.92 |
| ஜப்பான் யென் | 2.6346 | 2.7393 |
| சிங்கப்பூர் டொலர் | 245.36 | 254.12 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 428.58 | 445.81 |
| சுவிஸ் பிராங்க் | 350.48 | 364.07 |
| அமெரிக்க டொலர் | 333.88 | 346.49 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 903.00 | கட்டார் ரியால் | 93.19 |
| குவைத் டினார் | 1,113.72 | சவூதி ரியால் | 90.76 |
| ஓமான் ரியால் | 884.31 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 92.69 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 15ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 26

## குறள் தரும் சிந்தனை



படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது

தகுதியுடையவரின் அன்புக்குப் பாத்திரமானவராக இருப்பினும் சோம்பலுடையவர்கள் பெருமை எனும் பயனை அடைவதென்பது அரிதாகும்.

# நெருக்கடியை மேலும் பாரதூரமாக்கும் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள்!

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணுமாறு கோரி கொழும்பு காலி முகத்திடல் உட்பட நாட்டின் பல பாகங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. சமையல் எரிவாயு உட்பட எரிபொருட்களின் பற்றாக் குறைக்குத் தீர்வு காணுமாறும், பொருட்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துமாறும் கோரி இந்த ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோரில் ஒருதரப்பினர் நியாயமான கோரிக்கையை முன்வைத்துள்ளனர். ஆனால் இளவயதினரில் ஒருதரப்பினர் பொழுதுபோக்குக்காக கேளிக்கைகளில் ஈடுபட்டு வருவதைக் காண முடிகின்றது. அதேசமயம் ஆர்ப்பாட்டம் புரிவோரில் ஒருதரப்பினர் பொதுச்சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கும் வகையில் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இதுவரை இடம்பெற்றுள்ள வன்முறைச் சம்பவங்களில் பொதுச்சொத்துக்கள் அதிகளவில் சேதமாக்கப்பட்டுள்ளன. பொதுப்போக்குவரத்து சேவைகளை சீர்குலைக்கும் வகையிலான வன்முறைகளும் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன.

இவற்றுக்கெல்லாம் அப்பால் அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தமக்கான ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்தை மறைமுக நோக்காகக் கொண்டு ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் இயங்குவதை அறிய முடிகின்றது. அரசியல் கட்சிகளின் இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களின் காரணமாக ஆர்ப்பாட்டங்கள் சமீப நாட்களாக திசைமாறிச் செல்வதைக் காண முடிகின்றது. இந்த ஆர்ப்பாட்டங்களின் உண்மையான நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் மக்கள் திண்டாடுகின்றனர்.

எதிரணியின் நோக்கமானது நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதல்ல என்பது தெளிவாகவே தெரிகின்றது. பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான காத்திரமான ஆலோசனைகள் எவற்றையுமே எதிரணி இன்னுமே முன்வைக்கவில்லை. அரசாங்கத்துக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்டுவதிலேயே அவர்கள் குறியாக நிற்கின்றனர்.

அரசாங்கத்தை மென்மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கி அதிகாரத்தை எவ்வாறாயினும் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்பதே எதிரணியின் இலக்கு என்பது புரிகிறது. அவர்கள் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான யோசனைகளை முன்வைக்க வேண்டிய தருணம் இதுவாகும். வெறுமனே அரசாங்கத்தை வசைபாடிக் கொண்டிருப்பதனால் இன்றைய நெருக்கடிக்கு தீர்வு வந்துவிடப் போவதில்லை.

மறுதரப்பில் தமிழ், முஸ்லிம் சிறுபான்மைக் கட்சிகளும் இன்றைய நெருக்கடியை மறந்தபடியே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்கள் தத்தமது இனத்துக்கான அரசியல் கோரிக்கைகளை மாத்திரமே இவ்வேளையில் முன்வைக்கின்றனர். அதுமாத்திரமன்றி, அரசாங்கத்துக்கு சவால் விடும் வகையில் ஆக்ரோஷமான கருத்துகளை வெளியிடுகின்றனர். இன்றைய சந்தர்ப்பத்தை தங்களுக்கான பேரம் பேசும் சந்தர்ப்பமாக அவர்கள் கருதுவதாகத் தெரிகின்றது.

எமது நாடு தற்போது உண்மையிலேயே பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றது. டொலர் பற்றாக்குறை காரணமாக எரிபொருள் தட்டுப்பாடும், பொருட்களின் விலை அதிகரிப்பும் மக்களுக்கு பெரும் சுமையை ஏற்படுத்தி உள்ளன. இந்நிலையில் மக்கள் மீதான சுமைகளை மேலும் அதிகரிப்பதற்கு வழி செய்யும் வகையிலேயே அரசாங்கத்துக்கு எதிரான அனைத்துக் கட்சிகளும் தற்போது செயற்பட்டுக் கொண்டிருப்பதை காண முடிகின்றது.

இன்றைய நிலைமையை அரசியல் நெருக்கடியாக மாற்றுவதிலேயே அரசுக்கு எதிரான சக்திகள் மும்முரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்கள் இவ்வாறு தொடர்ந்தும் செயற்படுவார்களானால் நாட்டில் பொருளாதார நெருக்கடி மென்மேலும் அதிகரிக்கும் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. எதிரணியினருக்கு நாட்டின் மீதும் மக்களின் மீதும் உண்மையான அக்கறை இருக்குமானால் அவர்கள் சிந்தித்து செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

எமது நாட்டுக்கென்று அரசியலமைப்பொன்று உள்ளதை எவரும் மறந்து விடலாகாது. நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலின் அடிப்படையிலேயே நாட்டின் அரசாங்க நிர்வாகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தையோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களையோ பதவிகளைத் துறந்து விட்டு வீட்டுக்குச் செல்லுமாறு கூறுவது அரசியல் அமைப்புக்கு ஏற்புடையதல்ல. ஆர்ப்பாட்டங்களை நடத்துவதால் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் பதவிகளைத் துறக்க வேண்டும் என்று எதிர்பார்க்கவும் முடியாது.

எந்தவொரு அரசியல் மாற்றமும் எமது நாட்டின் அரசியலமைப்பு வரம்புகளுக்கு உட்பட்டவாறே அமையும் என்பதை ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியம். நாட்டின் ஜனநாயகம் என்பது கேலிக்குரியதல்ல என்பதையும் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்றைய நிலையில் பொருளாதார நெருக்கடியில் இருந்து முதலில் நாம் மீண்டெழ வேண்டும். இன்றைய பொருளாதார நெருக்கடி உருவாகியதற்கான காரணங்கள் பல உள்ளன. அவற்றில் அரசாங்கத்தின் சில தவறுகளும் உள்ளதை அரசுதரப்பினரே ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். அத்தவறுகளை திருத்திக் கொள்வதற்கும் அரசாங்க தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளதை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்.

நாட்டின் தேசிய வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கான வழிவகைகளை முதலில் நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தேசிய வருமானத்தை ஈட்டிக் கொள்வதில் சுற்றுலாத்துறை முதலிடம் வகிக்கின்றது. நாட்டில் அரசியல் நெருக்கடி தொடருமேயானால் சுற்றுலாத்துறையை முன்னேற்றிக் கொள்வது சிரமமான காரியமாகும். இவற்றையெல்லாம் நன்கு கவனத்தில் கொண்டு எதிரணியினர் செயற்படுவது அவசியமாகும். மக்களை ஆர்ப்பாட்டத்திற்காகத் தூண்டிவிட்டு, நிலைமையை மேலும் மோசமாக்குவது நேர்மையான அரசியல் பாதையல்ல.

editor.tkn@lakehouse.lk

# ஒடுக்கப்பட்ட பாலஸ்தீன மக்களின் விடுதலைக்கான சர்வதேச குத்ஸ் தினம்

## நாளை அனுஷ்டிப்பு



மறைந்த இமாம் கொமெய்னி (ரஹ்) அவர்கள் 1979ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி இவ்வாறு கூறினார்: "இந்த ஆக்கிரமிப்பாளரின் (இஸ்ரேல்) மற்றும் அதன் ஆதரவாளர்களின் கைகளை பாலஸ்தீனத்திலிருந்து துண்டிக்க அனைத்து முஸ்லிம்களையும் முஸ்லிம் அரசாங்கங்களையும் ஒன்றிணைய நான் அழைப்பு விடுக்கிறேன். மேலும் ரமழான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமையை 'குத்ஸ்தினம்' என்று பெயரிடுமாறு உலகெங்கிலும் உள்ள அனைத்து இஸ்லாமியர்களையும் கேட்டுக் கொள்கிறேன். (பலஸ்தீனிய) முஸ்லிம்களின் சட்டபூர்வ உரிமைகளை ஆதரிப்பதில் முஸ்லிம்களின் சர்வதேச ஒற்றுமையை வெளிப்படுத்துமாறும் கோரிக்கை விடுக்கின்றேன்."

இத்தினமானது பாலஸ்தீனியர்கள் மற்றும் பிற ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உலகளாவிய ஆதரவைப் பிரதிபலிக்கிறது.

'சர்வதேச குத்ஸ் தினம்' நாடுகள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சிவில் அமைப்புகளால் ஊர்வலங்கள், மாநாடுகள் மற்றும் பேரணிகள் மூலம் அனுஷ்டிக்கப்படுகிறது. இது இமாம் கொமெய்னி (ரஹ்) அவர்களின் இந்த நுண்ணறிவு மிக்க அறிவிப்பு எல்லை கடந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

சியோனிசம் என்பது ஒரு இயக்கமாக, 1800களின் பிற்பகுதியில் யூதர்களை ஒன்றிணைப்பதற்காக உருவாக்கப்பட்டது. அச்சமயம் பலஸ்தீன மண்ணில் வெறும் 5% மட்டுமே இருந்த யூதர்களால் இஸ்ரேல் என்ற ஓர் அரசு பலாத்காரமாகவும் சட்டவிரோதமாகவும் உருவாக்கப்பட்டது. அதாவது இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு பலஸ்தீனர்களுக்கு சொந்தமான பூமியை அபகரித்து ஆக்கிரமித்த மேற்கத்திய சக்திகள் 1948 இல் இஸ்ரேல் என்று அறிவித்து அங்கீகரித்தன.

இற்றைக்கு ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பு, சலாஹுத்தீன் ஐய்யூபி யூதர்களுக்கு அபயமளிக்குமுகமாக அவர்களை ஜெருசலேமுக்கு அழைத்து வந்து, பெரும்பான்மையான முஸ்லிம்களுடன் அவர்களைக் குடியமர்த்தினார். ஆனால் கடந்த காலத்தில் யூதர்களுக்கு முஸ்லிம்கள் காட்டிய கருணைக்கான நன்றிக்கடனை 800 ஆண்டுகள் கடந்த பின்னர், ஐ.நா தலைமையகம் இவ்வாறே திருப்பிச் செலுத்தியது.

பலஸ்தீனத்தில் இஸ்ரேலின் மேலாதிக்கம் அல்லது இடைவிடாத மத்திய கிழக்கு மோதல் என்று அறியாமையால் மற்றவர்கள் குறிப்பிடுவது தொடர்பான அனைத்து சாலை வரைபடங்களின் முக்கிய சூத்திரதாரியாகவும் தலைமை வடிவமைப்பாளராகவும் அமெரிக்கா இருந்து வருகிறது.

இப்போது எழும் மிக முக்கியமான கேள்வி என்னவெனில், 'ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக நடைபெற்ற அமைதிப் பேச்சுக்களில் ஏதேனும் உறுதியான சாதனைகள் பெறப்பட்டுள்ளதா? பாலஸ்தீனியர்களின் எதிர்காலம் குறித்து ஏதேனும் நம்பிக்கை உள்ளதா?' என்பதாகும்.

மறுபக்கம் பார்க்கையில் அமெரிக்க மற்றும் பிற ஐரோப்பிய ஆயுத உற்பத்தியாளர்களுக்கான ஆதாயமாக ஆயுத வர்த்தகம் வெளிப்படுகிறது.

1945 இல் அரபு லீக் அமைப்பு உறுப்பு நாடுகளுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. அவர்களின் கொள்கைகளை ஒருங்கிணைத்து அவர்களது பொதுவான நலன்களைப் பாதுகாக்க முடியும் என்றும் பலர் நினைத்தனர். ஆனால் அரபு லீக் அமைப்பின் சாதனைகள் என்ன? இவ்வமைப்பினாலும் அதன் சகோதர பலஸ்தீனிய விடுதலை அமைப்பினாலும் எந்த அளவிற்கு அவர்கள் கூறிய நோக்கங்களை அடைய முடிந்தது? என்பதை சிந்தித்தல் நன்று.

கேள்வி என்னவென்றால், அரேபியம் என்ற தேசியவாதத்தின் அடிப்படையில் நிறுவப்பட்ட அரபு லீக் மற்றும் பலஸ்தீன விடுதலை அமைப்பினால் எவ்வாறு பலஸ்தீனத்தின் விடுதலைக்கு வழிவகுக்க முடியும்? ஏனெனில் அதே தேசியவாதமே அபகரிக்கப்பட்ட பலஸ்தீனிய பிரதேசங்களில் இஸ்ரேலை நிறுவ பயன்படுத்தப்பட்டது.

எனவே, சர்வதேச குத்ஸ் தினம் மட்டுமே முஸ்லிம்களின் மூன்றாவது புனித தளமும் முதல் கிப்லாவுமான பைத்துல் முகத்தஸின் விடுதலையை உறுதி செய்யக் கூடிய ஒரே நடவடிக்கை என்பதில் சந்தேகமில்லை.

முஸ்லிம் நாடுகளின் ஒற்றுமையே பலஸ்தீனம் மற்றும் உலகின் பிற ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான இறுதி நம்பிக்கை. உண்மையில், இமாம் கொமெய்னி (ரஹ்) அவர்களின் செய்தியின் முக்கிய கருப்பொருளும் அதுவேயாகும்.

19.11.1921 இல் வெளியுறவுத்துறைக்கான பிரிட்டிஷ் செயலராக இருந்த ஜோர்ஜ் கர்ஸன் கூறிய விடயம் உன்னிப்பாக கவனிக்கத்தக்கது. 'முஸ்லிம் மக்களிடையே இஸ்லாமிய ஒற்றுமையைக் கொண்டுவரும் எந்த முயற்சிக்கும் நாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். கிலாபத் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதில் நாம் ஏற்கனவே வெற்றி பெற்றுள்ளதால், முஸ்லிம்கள் மத்தியில் அறிவு ரீதியாகவோ அல்லது கலாசார ரீதியாகவோ ஒற்றுமை என்ற ஒன்று மீண்டும் ஏற்படாது என்பதை உறுதி செய்ய வேண்டும்'.

ஈரானின் இஸ்லாமிய குடியரசின் தற்போதைய ஆன்மீகத் தலைவர் ஆயதுல்லா சையத் அலி காமனெய், 'மத்திய கிழக்கு பிராந்தியத்தில் கருத்து வேறுபாடு மற்றும் பிளவுகளை விதைப்பதன் மூலம் ஐ.எஸ். ஐ.எஸ் அமெரிக்க நலனுக்காக தெளிவாக சேவை செய்கிறது என்று கூறுவதற்கு இதுவே காரணமாகும்.

'இன்னும், நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; நீங்கள் பிரிந்தும் விடாதீர்கள்.(அல் குர்ஆன் 3:103) என்று அல்லாஹ் கூறியிருக்க இவ்வாறு நடக்கிறது.

சர்வதேச குத்ஸ் தினம் என்பது பலஸ்தீனியர்கள் மற்றும் பிற ஒடுக்கப்பட்ட மக்களுடனான ஒருமைப்பாட்டை தெரிவித்தது ஆதரவு வழங்கும் தினமாகும். அதேவேளை ஒடுக்குமுறை மற்றும் அநீதியைக் கண்டிக்கும் நாளுமாகும்.

மறைந்த இமாம் கொமெய்னி (ரஹ்) நிறவெறியை வெறுத்தது மட்டுமல்லாமல் அதற்கு எதிரான போராட்டத்தில் நெல்சன் மண்டேலாவுக்கு பூரண உதவியை வழங்கினார். பதிலுக்கு நெல்சன் மண்டேலாவும், 'பலஸ்தீனன் சுதந்திரம் அடையாமல் தென்னாபிரிக்காவின் சுதந்திரம் முழுமையடையாது' கூறினார்.

நீண்ட சிறைத் தண்டனையில் இருந்து விடுதலையான மண்டேலா, தெஹ்ரானுக்கு மேற்கொண்ட முதல் விஜயத்தின் போது, ஒரு தந்தையின் ஸ்தானத்தில் இருந்து இமாம் வகித்த பாத்திரத்தையும் ஈரானின் வரலாற்று ஆதரவையும் பாராட்டினார்.

மறைந்த வெனிசுலா அதிபர் ஹியூகோ சாவேஸ், சர்வதேச குத்ஸ் தின நிகழ்வுகளில் தனது நாட்டில் ஏனைய போராட்டக்காரர்கள் மத்தியில் முன்னணியில் காணப்படும் முக்கிய நபராக இருந்தார்.

சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பகுதியில் நடக்கும் அட்டூழியங்களைக் கண்டும் காணாதது போல் புறக்கணித்து வரும் சவூதி அரேபியா, அதன் கூட்டாளிகளுடன் இணைந்து 2015 முதல் யெமனுக்கு எதிரான இராணுவத் தாக்குதலில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. யெமனில் நடந்த ஆக்கிரமிப்பின் விளைவை 'சமகால வரலாற்றில் மிக மோசமான மனிதாபிமான நெருக்கடி' என்று ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் வர்ணித்தது.

உலகம் முழுவதும் அமைதி காக்கவும், நீதி காக்கவும் போராடும் மக்களின் முயற்சியை அங்கீகரிப்பது கட்டாயம். இமாம் அவர்கள் வலியுறுத்தியது போன்று, குத்ஸ் தினம் என்பது ஒரு சர்வதேச தினம். இது குத்ஸுக்கே பிரத்தியேகமான நாள் அல்ல. ஒடுக்கப்பட்ட அனைவருக்காகவும், ஆணவ சக்திகளுக்கு எதிராகவும் எழுந்து நிற்கும் தினமாகும்.

அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகள் இஸ்ரேலுக்கு அளித்துவரும் தொடர்ச்சியான இராணுவ மற்றும் நிதி உதவியை உலகம் நன்கு அறிந்திருக்கிறது. பிராந்தியத்தில் அவர்களின் இடைவிடாத தலையீடு பிராந்திய மக்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை சீர்குலைத்து வருகின்றது. உலகெங்கிலும் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் மேம்படுத்துவதிலும் முன்னணி நிலைகளைக் கோரும் வளர்ந்த நாடுகள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் குறிப்பிட்ட நாடுகளின் பொய்களை இது அம்பலப்படுத்துகிறது. என்ன ஒரு நயவஞ்சகத்தனம், என்ன ஒரு இரட்டை நிலைப்பாடு!

தாஹா முஸம்மில்...

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டு; நாளை சிறப்புச் சொற்பொழிவு, குருபூசை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே (2022) இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும் சிவஸ்ரீ பால. திருகுணானந்தக்குருக்கள் (ரொறன்ரோ, கனடா) அவர்களின் அனுசரணையுடன் சமயஜோதி திரு.கதிர்காமன் நிஜலிங்கம் அவர்களின் ஒழுங்கமைப்பில் நடைபெற்று வருகின்றது.

மேற்படி நிகழ்ச்சித் தொடர் வரிசையிலே 17 ஆவது . சொற்பொழிவு நிகழ்வு நுணாவில் மேற்கு வீரபத்திரர் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நாளை 29.04.2022 பி.ப.3.30 மணிக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நாவலர் குருபூஜை, மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, 'சைவ சமய மறுமலச்சியின் தந்தை நாவலர்' எனும் தொனிப்பொருளில் இளம் சைவப் புலவர் ச.நவநீதனின் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்று, சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.



### நீர்வேலியில் சிறப்புச் சொற்பொழிவு:

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் வாராந்தச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை 29.04.2022 மாலை 5.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்களின் ஆசியுரையினை தொடர்ந்து நடைபெறும். ஆலய பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கம் தலைமையுரை ஆற்றுவார். சிறப்புச்சொற்பொழிவினை சிவநெறிச்செம்மல் சைவப்புலவர் பொன். சந்திரவேல் 'கிரியைகள் உணர்த்தும் வாழ்வியல்' என்னும் விடயப்பொருளில் நிகழ்த்துவார்.

திடற்புலம் நரசிங்க வைரவர் ஆலயத்தில்:

யாழ்ப்பாணம் திடற்புலம் நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் 01.05.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும். அன்றைய தினம் சொற்பொழிவினை இளம்சைவப்புலவர் ச. நவநீதன் 'ஆலய தரிசனம்' என்னும் விடயப்பொருளிலும், மறுநாள் 02.05.2022 திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு 'இறைவனின் அருள் சுரக்கும் இடம் ஆலயம்' என்னும் விடயப்பொருளிலும் நிகழ்த்துவார்.

அ.கனகசூரியர்...

# டிஜிட்டல் முறையில் தேசிய அடையாள அட்டை பரிசீலிப்பு; ஆட்பதிவு திணைக்களத்துடன் SLT-MOBITEL உடன்படிக்கை

இலங்கையின் நவீன டிஜிட்டல் தீர்வுகளை மாற்றியமைப்பதில் தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLTMOBITEL, ஆட்பதிவுத் திணைக்களத்துடன் கைகோர்த்துள்ளது. இலங்கையின் தொலைத் தொடர்பாடல் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த அங்கமாக, SLTMOBITEL இடமிருந்து வாடிக்கையாளர்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் போது டிஜிட்டல் முறையில் தேசிய அடையாள அட்டையை பரிசீலித்து உறுதி செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆளுநர் நாயகம் வியானி குணதிலக மற்றும் மொபிடெல் பிரைவட் லிமிடெட் பிரதம நிறைவேற்று அதிகாரி சந்திக விதாரென ஆகியோரிடையே இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இந்நிகழ்வில் இரு நிறுவனங்களையும் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

ஆட்பதிவுத் திணைக்களத்துடனான SLTMOBITEL'இன் பங்காண்மையினூடாக வங்கிகள் மற்றும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கு மாத்திரம் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை பரிசீலிக்கும் வசதி தற்போது அதன் சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பங்காண்மையினூடாக, உறுதி செய்யப்பட்ட வாடிக்கையாளர் அறிந்திருப்பு தகவல்களை பெற்றிருப்பதை SLTMOBITEL உறுதி செய்கின்றது. நிறுவனத்தினால் புதிய இணைப்புகள் மற்றும் இதர சேவைகள் வழங்கப்படும் போது, மோசடிகள் மற்றும் குற்றச் செயல்கள் இடம்பெறுவதை கட்டுப்படுத்த இந்த நடவடிக்கை உதவியாக அமைந்திருக்கும் என்பதுடன் தேசிய பாதுகாப்பை மேம்படுத்தவும் உதவியாக அமைந்திருக்கும்.

வாடிக்கையாளர்கள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு அடுத்த தலைமுறை இணைப்புத் தீர்வுகளை வழங்கி தேசத்தின் டிஜிட்டல் மாற்றியமைப்பு பணிகளை முன்னெடுப்பதில், தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகள் வழங்குநர் எனும் வகையில், SLTMOBITEL இனால் அதிகளவு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.



மொபிடெல் பிரைவட் லிமிடெட் பிரதம நிறைவேற்று அதிகாரி சந்திக விதாரரென, ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆளுநர் நாயகம் வியானி குணதிலகவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையை கைமாற்றிக் கொள்வதையும், அருகில் மொபிடெல் சார்பாக தயாரிப்புகள் தலைமை அதிகாரி ஷியாங் வொங்க, பிராந்திய தலைமை அதிகாரி தென்ஹம் பெரேரா, நுகர்வோர் விற்பனைகளுக்கான பொது முகாமையாளர் சுகத் அபேசிங்க, பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி சஷிக செனரத் மற்றும் ஆட்பதிவுத் திணைக்களம் சார்பாக மேலதிக ஆளுநர் நாயகம், ஆர்.எல்.எஸ்.பி. சுவர்ணலதா (இடமிருந்து இரண்டாமவர்), பிரதான கணக்காளர் எல். எம். தெனவக, செயற்பாடுகளுக்கான ஆளுநர் ரித்ம புளத்சிங்கள, அபிவிருத்தி, ஆய்வுகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆளுநர் எச்.எம்.ஐ.கே. ஹேரத் மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரதி ஆளுநர் எரந்தி வீரசிங்க ஆகியோரையும் காணலாம்.

# இறுதிவரை அயராமல் இயங்கிய இலக்கிய காவலர் சோமகாந்தன்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நாவலர் ஆய்வரங்கொன்றை வெள்ளவத்தை இராம கிருஷ்ண சிறிய மண்டபத்தில் ஒரு மாலை வேளையில் ஒழுங்கு செய்திருக்கும் தகவலை நண்பர் மு.கனகராஜன் எனக்குச் சொன்னார். நான் 'மல்லிகை' ஊடாக அறிமுகமாகியிருந்த காலப்பகுதி அது. குறிப்பிட்ட ஆய்வரங்கைப் பற்றிய செய்திக் கட்டுரையை மல்லிகையில் எழுதுவதற்காக அங்கு சென்றிருந்தேன்.

சங்கச் செயலாளர் பிரேம்ஜி வரவேற்புரை நிகழ்த்தினார்.

கைலாசபதியும் முகம்மது சமீமும் தத்தமக்கேயுரித்தான கண்ணோட்டங்களுடன் நாவலரைப் பற்றி பேசினார்கள்.

அந்த ஆய்வரங்கில் வரவேற்புரை நிகழ்த்திய பிரேம்ஜி நாவலரின் பெயருடன் இன்னும் ஒருவரின் பெயரையும் அடிக்கடி உச்சரித்தார். அந்தப்பெயர் நா. சோமகாந்தன்.

சிரித்த முகம். எவரையும் கவரத்தக்க தோற்றம். சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார். எவரும் அவரை எனக்கு அறிமுகப்படுத்தவில்லை. ஆனால் கனகராஜன் மூலம் என்னைத் தெரிந்து கொண்டு (காரணம் அன்று அந்தக் கூட்டத்தில் நானொரு புது முகம் அவருக்கு) கூட்டம் முடிந்ததும் அருகே வந்து தோளைத் தொட்டு "நீர்கொழும்பிலிருந்து வந்திருக்கிறீர். இந்த இரவில் திரும்பி ஊர்போய்ச் சேருவதற்கு பஸ் இருக்குமா?" என்று வாஞ்சையோடு கேட்டார்.

அக்காலப்பகுதியில் எழுத்துலகில் பிரவேசித்திருந்த இந்தப் புதியவன் சந்தித்த வாஞ்சையான மனிதர்களில் ஒருவர் சோமகாந்தன்.

இறுதியாக 2005 ஆம் ஆண்டு டிசம்பரில் கொழும்பு அண்டர்சன் தொடர் மாடியில் எனக்கு விடைகொடுத்து, நண்பர் எழுத்தாளர் புலோலியூர் இரத்தினவேலோன் வீட்டுக்கு வழிகாட்டி, ஒரு ஓட்டோ வாகனத்தை எனக்காக ஒழுங்கு செய்து வழியனுப்பினார். அதுவே அவருடனான இறுதிச் சந்திப்பு.

அவருடனான முதல் சந்திப்பு எப்படி என்னால் மறக்க முடியாததோ, அதே போன்றதுதான் அந்த இறுதிச் சந்திப்பும்.

“இரத்தினவேலோன் வீட்டுக்குச் சென்ற பின்னர் எங்கே போகிறீர்?" எனக் கேட்டார் சோமகாந்தன்.

“ஜீவாவிடம் போகிறேன்."

“அப்படியா. எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். மல்லிகை 41 ஆவது ஆண்டு மலருக்கு ஒரு கட்டுரை எழுதியிருக்கிறேன். இதோ படித்துப் பாரும். ஜீவாவிடம் இதனைச் சேர்ப்பித்து விடுங்கள்."

அவரைப் போலவே அழகான கையெழுத்திலிருந்த அந்தக் கட்டுரையை படித்தேன்.

மல்லிகை ஆசிரியரும் வாசகர்கள் மலரிலும் படிப்பதற்கு முன்பே அதனைப் படித்தவர்கள் இருவர். ஒன்று நான். மற்றவர் அதற்கு முன்னர் அதனைப் படித்த அவரது மனைவியும் அவரது முதல் வாசகியுமான திருமதி பத்மா சோமகாந்தன்.

தேசிய ஒருமைப்பாடு மாநாடு, பாரதி நூற்றாண்டு விழா, இ.மு.எ.ச. கொழும்புக்கிளை கொரஸ என்ற தென்னிலங்கை சிங்களக் கிராமத்தில் நடத்திய கருத்தரங்கு, சங்கத்தின் வெள்ளி விழா, கொழும்பில் மாதாந்த கருத்தரங்குகள், 1986 இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடந்த மாநாடு... இப்படியாக பல்வேறு நிகழ்வுகளில் சோமகாந்தனுடன் இணைந்து பணியாற்றிய போது அவரது ஓய்வற்ற செயல்பாடுகள் எனக்கு மட்டுமல்ல பலருக்கும் முன்மாதிரியானதுதான் என்பதையும் புரிந்து கொள்ள முடிந்தது.

எடுத்த கருமத்தை ஊண் உறக்கம் பாராது செய்து முடிக்கும் திறன் அவர் கைவரப்பெற்றிருந்த கலை.

சங்கம் பல சோதனைகளை, கடும் விமர்சனங்களை, நெருக்கடிகளை சந்தித்த தருணங்களில் எல்லாம் நிதானமாக அதேசமயம் வேகமாகவும் இயங்கும் ஆற்றல் அவருக்கே உரித்தானதுதான்.

எப்போதோ எழுதத் தொடங்கியவர். முற்போக்கு எழுத்தாளர் சங்கம், நாவலர் சபை, இந்து மாமன்றம் உட்பட பல வெகுஜன இயக்கங்களின் வேலைத் திட்டங்களில் அமைப்புச் செயலாளராக அவர் தீவிரமாக இயங்கியதனால் ஆக்க இலக்கிய முயற்சிகளில் ஈடுபாடு அரிதாகியிருந்தது.



## இன்று நினைவு தினம் (1934–2006)



எவரையும் வெறுக்கத் தெரியாதவர். மற்றவர்கள் வெறுத்தாலும் அதற்காக கோபித்து வெறுக்கத் தெரியாதவர். ஆனால் எவரேனும் கோபித்து ஒதுங்கிக் கொண்டால் தானும் ஒதுங்கிக் கொள்ளும் சுபாவம் கொண்டவர்.

சோமகாந்தனின் 'ஆகுதி' கதைத் தொகுதி வெளியீட்டு விழா 1986 இறுதியில் நல்லூரில் நடந்த போது, பிரேம்ஜி, ஜீவா, நந்தி, முருகையன், மௌனகுரு, சொக்கன் ஆகியோருடன் நானும் உரையாற்றினேன்.

பின்னர் கொழும்பு கமலா மோடி மண்டபத்தில் முன்னாள் நீதியரசர் எச்.டபிள்யூ. தம்பையா அவர்களின் தலைமையில் நடந்த அறிமுகவிழாவிலும் உரையாற்றினேன்.

சோமகாந்தன் அனைத்து தமிழ்ப் பிரதேசங்களையும் சேர்ந்த சகல தமிழ் எழுத்தாளர்களையும் உளமாற நேசித்தவர். அவர் பல மலர்கள், நூல்களின் பதிப்பாசிரியர். தொகுப்பாசிரியர்.

மல்லிகை ஜீவா, டொக்டர் நந்தி ஆகியோரின் மணி விழா மலர்த்தொகுப்பு, 1998 இல் வெளியான பிரேம்ஜியின் எழுத்துலக பொன்னாண்டு தொகுப்பு நூல் ஆகியனவும் சோமகாந்தனின் முன்முயற்சிகள்தான்.

இறுதியாக கொழும்பில் அவரது 'ஆகுதி' அறிமுகவிழாவில் விடைபெற்று மீண்டும் பதினொரு வருடங்களின் பின்னர் கொழும்பில் மற்றுமொரு இலக்கியச் சந்திப்பில்தான் அவரைச் சந்தித்தேன்.

'துரைவி' பதிப்பகம் நடத்திய துரை விஸ்வநாதனின் ஸ்தாபனத்தின் மேல்மாடியில் தினகரன் ஆசிரியராக பதவியேற்ற ராஜஸ்ரீகாந்தனுக்கும் நீண்ட நாட்களுக்குப் பின்பு இலங்கை திரும்பியிருந்த எனக்கும் வரவேற்புக் கூட்டமும் 1997 டிசம்பர் 6 – 7 ஆம் திகதிகளில் கொழும்பில் நடத்தவிருந்த இலக்கிய ஆய்வரங்கு தொடர்பான ஆலோசனைச் சந்திப்புமாகவும் அந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட ஆய்வரங்கு மலருக்கு ஒரு கட்டுரை வேண்டுமென்றார் சோமகாந்தன்.

"இன்னும் இரண்டு நாளில் நடக்கவிருக்கும் ஆய்வரங்கில் வெளியிடப்படவுள்ள மலருக்கு கட்டுரை கேட்கிறீர்களே? எப்படி சாத்தியம்?" என்றேன்.

“உமது கட்டுரை இடம்பெற வேண்டும். உடனே எழுதித் தாரும்" என்றார்.

'புலப்பெயர்வும் ஒட்டுறவும்' என்ற சிறிய கட்டுரையை உடனே எழுதிக் கொடுத்து விட்டு வந்து விட்டேன்.

எனக்குச் சந்தேகம். இடையிலிருந்த குறுகிய கால அவகாசத்தில் எனது கட்டுரையையும் பதிப்பித்து மலரையும் அச்சிட்டு விடுவாரா?

என்ன ஆச்சரியம் !

ஆய்வரங்கு தொடங்குவதற்கு முன்பாக அந்தக் காலை வேளையில் இராமகிருஷ்ண மண்டபத்தில் எனது கட்டுரையும் இடம்பெற்ற மலரின் பிரதிகளுடன் சோமகாந்தன்தான் முதலில் தரிசனம் தந்தார்.

இப்படியும் ஒரு அபூர்வமான, இயந்திரமாக இயங்கும் ஒருவரை எனது வாழ்நாளில் இதுவரையில் நான் சந்தித்ததில்லை.

ஈடு செய்யப்படவேண்டிய அவரது ஆசனம் இன்னமும் வெற்றிடமாகத்தான் இருக்கிறது.

2006 ஏப்ரில் மாதம் எனது மாமனார்(மனைவியின்அப்பா) மருத்துவர் பஞ்சநாதன் பிலிப்பைன்ஸில் மறைந்ததையடுத்து அங்கு சென்று அவரது இறுதிச்சடங்குகளை முடித்து விட்டு சிங்கப்பூர் திரும்பிய சமயம் – அந்த மாதம் 28 ஆம் திகதி சோமகாந்தன் எங்களையெல்லாம் விட்டு மறைந்தார் என்ற அதிர்ச்சியான செய்தி கிடைத்தது. அவரது மகள் கலாஞ்சலியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல் சொன்னேன்.

அவரைப் பற்றி தமிழ் விக்கிபீடியாவின் பதிவுகள் இதோ:

1991 இல் இவரது இலக்கியப் பணியைக் கௌரவித்து திருகோணமலை இலக்கிய நண்பர்கள் 'இலக்கியக் குரிசில்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தார்கள். 1994 இல் இலங்கை கலாசார அமைச்சு தமிழ் மொழிக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் அவர் வழங்கிய சேவையைப் பாராட்டி 'தமிழ் ஒளி' என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தது.

வெளிவந்த நூல்கள்:

நிலவோ நெருப்போ (சிறுகதைத் தொகுதி), விடிவெள்ளி பூத்தது (நாவல், வரதர் வெளியீடு), ஈழத்து இலக்கிய வரலாறு பல்துறை நோக்கு(ஆய்வு), பொய்கை மலர் (நாவல்), நிகழ்வுகளும் நினைவுகளும் காந்தன் கண்ணோட்டம், தத்துவச் சித்திரங்கள்(வானொலி உரைகள்), ஆகுதி(சிறுகதைத் தொகுதி), ஈழத்தமிழருக்கு ஏன் இந்த வேட்கை?, Lanka and Ramayanam, Ancient Temples of Shiva in Sri Lanka



சோமகாந்தனின் பன்முகப்பணிகளை சித்திரிக்கும் பலரதும் ஆக்கங்களுடன் 'சோமகாந்தம்' என்ற தொகுப்பும் வெளியாகியிருக்கிறது.

**லெ.முருகபூபதி...**
*(எழுத்தாளர், ஊடகவியலாளர்) அவுஸ்திரேலியா.*

---

# எமது பிரதேசத்தின் கலைகளையும் பாரம்பரியங்களையும் அழிந்து விடாமல் பாதுகாப்பது நம் அனைவரதும் கடமை

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மொழி மூலமான 13 பிரதேச செயலகங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட உதவி அவசியமான 81 கலைஞர்களுக்கான வருடாந்த உதவித் தொகை வழங்கும் நிகழ்வு நிந்தவூர் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றின்சன் ஒருங்கிணைப்பில், நிந்தவூர் பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் எம்.ஐ.எம். முஹம்மட் ஷரீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றினார்.

'அமைதியான, ஒழுக்கமான, முழுமையான சிறந்த மனிதர்களைக் கொண்ட புனித தேசத்தை ஒன்றுசேர்ந்து கட்டியெழுப்புவோம்' எனும் உயர்ந்த நோக்கில் கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. கலாசார அலுவல்கள் திணைக்களத்தோடு ஒன்றிணைந்து பயணித்த, பயணிக்கின்ற கலைஞர்களில் உதவி அவசியப்படுகின்ற மூத்த கலைஞர்களை இனம் கண்டு அவர்களுக்கு உதவி வழங்கும் நோக்கில் வருடத்திற்கு ரூபா.10000.00 நிதி உதவி வழங்கப்பட்டு வருகின்றது. இந்த வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வருடம் அம்பாறை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழ்மொழி மூலமான 81 கலைஞர்களுக்கான காசோலை இங்கு வழங்கிவைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் இங்கு உரையாற்றும் போது, "கலைஞர்கள் சமூகத்தின் அடையாளங்களாக இருக்கிறார்கள். கலைத்துறையை அல்லது கலைஞர்களுடைய செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காக கலாசார அலுவல்கள் திணைக்களம் அம்பாறை மாவட்ட செயலகத்துடன் இணைந்து பிரதேசத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. உண்மையில் நமது கலைகள் என்பது நமது சமூகங்களின் அடையாளங்களாக காணப்படுகின்றன. இந்த கலைகளை மூத்த கலைஞர்கள் இளைய கலைஞர்களை நோக்கி கொண்டு செல்லவேண்டிய பொறுப்புள்ளவர்களாக இருக்கிறார்கள். எனவே எமது கலைகளை எமது இளைய சமூகத்திற்கு நாம் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவற்றின் ஊடாக எமது சமூக அடையாளமாக இருக்கின்ற கலைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

மாற்றங்கள் என்பது ஆண்டாண்டு காலமாக தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும். ஆனால் நமது கலைகள், நமது பாரம்பரிய பண்பாடுகள் மாறுபடாமல் முன்கொண்டு செல்லப்பட வேண்டும். அப்போதுதான் எமது கலாசார பண்பாட்டு விழுமியங்களை நாம் பாதுகாக்க கூடியதாக இருக்கும்.

இன்று மாற்றங்கள் என்ற போர்வைக்குள் பல நவீன கலாசார பண்பாடுகள் ஊடுருவி இருக்கின்றன. ஆனால் எமது பண்பாடு, கலாசாரம், சமூக வாழ்வியல் அம்சங்களை பிரதிபலிக்கின்ற கலைகளை நவீன வளர்ச்சி முறைக்குள் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு கலைஞர்களுக்கு இருக்கின்றது.

அதேபோன்று சான்றுப்படுத்தல் என்பது முக்கியமாகும். சான்றுப்படுத்தல் எனும்போது, எமது கலைகள் அழிந்து செல்லாமல் அவற்றைப் பாதுகாப்பதற்கான முறைமையை குறிக்கின்றது. எம்மிடமிருந்து பல கலைகள் மறைந்து போனமைக்கு காரணம் அவைகள் சரியாக சான்றுப்படுத்தப்படவில்லை. எனவே இந்த கலைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் முக்கியமானதாகும்.

உதாரணமாக, நமது முன்னோர்களுடைய வாழ்வியல் அம்சங்கள் அது விவசாயமாக அல்லது மீன்பிடி, கல்வித்துறை, தொழில்நுட்பம் எதுவானாலும் அல்லது அதற்காக பயன்படுத்திய கருவிகளாக கூட இருக்கலாம் இவைகள் பாதுகாக்கப்பட வேண்டியது முக்கியமாகும்.

நமது முன்னோர் வயல்வெளியில் ஒன்றுகூடி சூடு அடிப்பது, சூடு வைப்பது அதேபோன்று தென்னை ஓலைகளை பின்னுவது, அல்லது தென்னை ஓலைகளில் குடிசைகளை அமைத்துக் கொள்வது போன்றன இன்று அழிந்து வருகின்ற விடயங்களாகும். இவைகளை பாதுகாக்கின்ற முறைகள் நம்மிடம் இல்லாமல் இருக்கின்றன. அவற்றை நாம் உருவாக்க வேண்டும். மலேசியா, ஜப்பான் போன்ற நாடுகளில் அங்கு வாழ்கின்ற மக்கள் பயன்படுத்திய அல்லது அவர்களுடைய வாழ்வியல் அம்சங்களை புடம் போட்டு காட்டுகின்ற இதுபோன்ற விடயங்களை கிராம ரீதியாக அங்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

எமது பிரதேசத்திலும் கலைகள் அல்லது கலைஞர்கள் அவர்களுடைய வாழ்வியலோடு மறைந்து செல்லாமல் அந்த சமூகத்தின் அடையாளங்களாக தொடர்ச்சியாக பாதுகாப்பதற்காக தேவையான விடயங்களை இங்கு இருக்கின்ற மூத்த கலைஞர்கள் மேற்கொள்ள வேண்டும். இன்று பல்வேறு பொருளாதார நெருக்கடியான சூழலிலும் புது வருடத்துக்கு முன்னர் கலைஞர்களுக்கான கொடுப்பனவை வழங்க வேண்டும் என்பதற்காக சகல பிரதேச செயலகங்களிலும் உள்ள கலைஞர்களை ஒன்றிணைத்து நாம் இந்த காசோலைகளை வழங்கி கொண்டிருக்கிறோம்.

எனவே தங்களுடைய சமூகம் சார் கலைகளை வெளிப்படுத்துவதற்கு இங்கு இருக்கின்ற மூத்த கலைஞர்கள் தங்களாலான ஒத்துழைப்புகளை தொடர்ந்தும் வழங்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மாவட்டத்தின் தமிழ்மொழி மூல பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டதுடன் மூத்த கலைஞர்களுடைய பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன.

## அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 81 கலைஞர்களுக்கு தலா 10,000 ரூபா உதவித்தொகை









**ஏ.எல்.எம்.ஷினாஸ்...**
*(பெரியநீலாவணை விசேட நிருபர்)*

---

# APIIT BUSINESS SCHOOL–NESTLE LANKA PLC இணைந்து அறிமுகம் செய்துள்ள APIIT அத்வெல

APIIT Sri Lanka என்பது சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்ற இங்கிலாந்தின் Staffordshire பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் வணிகம், கணினி மற்றும் சட்டம் ஆகிய பட்டப்படிப்புகளை (இளங்கலை மற்றும் முதுகலை) மாணவர்களுக்கு வழங்கி வரும் ஒரு புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனமாகும். தற்போது 1500 இற்கும் அதிகமான மாணவர்கள் இங்கு கற்பதுடன் ஒவ்வொரு வருடமும் சுமார் 600 மாணவர்கள் பட்டப்படிப்புகளுக்கு பதிவு செய்கின்றனர். கடந்த 22 ஆண்டுகளில், 4,000 இற்கும் மேற்பட்ட ஆக்கபூர்வமான மற்றும் திறமையான பட்டதாரிகளை உருவாக்கி இலங்கையில் தனியார் உயர்கல்வி தரத்தை மேம்படுத்தி சர்வதேச அளவு தரத்திற்கான ஒரு அளவுகோலை அமைத்துள்ளனர்.

நாட்டின் உயர்கல்வி கற்றலில் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதே APIIT Sri Lanka இன் நோக்கமாகும். இந்நோக்கத்திற்காக APIIT Business School அதன் மாணவர்களை வேலைவாய்ப்பு ரீதியாகவும் வணிகரீதியாகவும் தொழில்முனைவோர்களாக மாற்ற உதவுகிறது.

APIIT BUSINESS SCHOOL ஆனது 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் திகதி கொழும்பில் உள்ள தாஜ் சமுத்ரா ஹோட்டலில் APIIT அத்வெலவை அறிமுகப்படுத்தியது. APIIT அத்வெல பல்வேறு முக்கிய பங்குதாரர்களுடன் மதிப்பு உருவாக்கும் கூட்டாண்மைகளை ஆற்றுவதற்கான தொடர்ச்சியான திட்டமாக செயல்படுவதோடு கல்வியில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி சமூகத்தில் உறுதியான தாக்கத்தை ஏற்படுத்தும்.




சிறிய அளவிலான வர்த்தகர்கள் மற்றும் நிறுவனங்களின் வியாபாரத்தை மேம்படுத்துவதற்காகவே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆரம்ப திட்டமானது NESTLE LANKA PLC இன் பிரதிநிதிகள் APIIT BUSINESS SCHOOL இன் மாணவர்களுக்கு சிறு வர்த்தக வியாபாரத்தை நடத்துவதற்கான நடைமுறை அம்சங்கள் அதாவது வர்த்தகம், பங்கு கட்டுப்பாடு மற்றும் செயல்பாட்டு மூலதன முகாமைத்துவம் போன்றவற்றைப் பயிற்றுவிப்பார்கள்.

இதற்கமைய ஒவ்வொரு மாணவரும் தங்கள் சுற்றுப்புறத்தில் உள்ள ஒரு தெருவின் அடிப்படையில் உள்ளூர் வர்த்தகருடன் இணைந்து அங்கே அமைந்திருக்கும் ஒரு சிறிய அளவிலான வர்த்தக மையத்தின் சில்லறை விற்பனையாளருக்கு மாறிவரும் நுகர்வோர் முறைகளுக்கு மத்தியில் நுகர்வோர் முறைகளை மாற்றி கேள்விகள் நிறைந்த வணிகச் சூழலில் போட்டித்தன்மையுடன் இருக்க எவ்வாறு வளங்களை மேம்படுத்துதல் மற்றும் செயற்பாடுகளை நிர்வாகித்தல் தொடர்பில் உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி அவர்களின் வணிகத்தை வெற்றிப்பெறச் செய்ய வேண்டும்.

இத்திட்டம் குறித்துAPIIT இன் தலைவர் பந்துல எகொடகே அவர்கள் கருத்து தெரிவிக்கையில் 'இத்திட்டம் அனைத்து திட்ட பங்குதாரர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டவொரு மதிப்பை உருவாக்குகிறது, ஏனெனில் மாணவர்கள் எங்கள் தொழில் கூட்டாண்மையாளரான NESTLE LANKA PLC வழங்கும் பயிற்சியின் மூலம் சிறிய அளவிலான சில்லறை வணிகங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பது தொடர்பான அறிவையும் அனுபவத்தையும் கற்றுக் கொண்டு நடைமுறை தொழில் முனைவோர் திறன்களையும் வளர்த்துக் கொள்கின்றனர். அதே நேரத்தில், சில்லறை வணிகங்களில் மாணவர்கள் தங்கள் செயல்பாடுகளை மேம்படுத்த உதவுவதன் மூலம் சிறிய அளவிலான சில்லறை வணிக சமூகம் பெரிதும் பயனடைகின்றது' என்றார்.

NESTLE LANKA PLC இன் சிரேஷ்ட துணைத் தலைவரும் விற்பனைப் பிரிவின் தலைவருமான ஜகத் வெடகே மற்றும் சர்வதேச அமைப்பின் சிரேஷ்ட பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் மாணவர்களுக்கு முன்பாக உரையாற்றினர். சில்லறை விற்பனையாளர் வணிக மேம்பாட்டுத் திட்டத்திற்குத் தேவையான அறிவு மற்றும் திறன்களை வழங்குவதற்காகவே மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிப்பதற்காக தொடர்ச்சியான மையப்படுத்தப்பட்ட பட்டறைகளை அவர்கள் ஏற்பாடுசெய்துள்ளனர்.

இத் தொடக்க விழாவில் கலந்து கொண்ட 240 மாணவர்களிடம், சிரேஷ்ட துணைத் தலைவரும் விற்பனைப் பிரிவின் தலைவருமான ஜகத் வெடகே மேலும் தெரிவித்ததாவது, 'இந்த ஆக்கப்பூர்வமான அறிவுப் பரிமாற்ற பாதையில் செயல்படுவதில் நாங்கள் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். அத்தோடு சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற எங்கள் நோக்கத்திற்கு ஏற்ப சிறிய அளவிலான சில்லறை விற்பனையாளர் சமூகம் வளர்ச்சியடைந்து சிறந்த வாழ்வாதாரத்தை அவர்கள் அடைவதற்கு ஆதரவளிக்கும் முகமாகவே இளைய தலைமுறை வணிகத் தலைவர்களுக்கு நாங்கள் பயிற்சி அளிக்கிறோம்'என்றார்.

### பிரதமர் பதவி விலகக் கூடாது

# பிரதேச சபை தலைவர்கள், மேயர்கள் ஏகமனதாக தீர்மானம்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமா செய்யக்கூடாதென பிரதேச சபை தவிசாளர்களும் மேயர்களும் ஏகமனதாக தீர்மானித்துள்ளனர்.

பிரதமருடன் அலரி மாளிகையில் நேற்று (27) நடைபெற்ற சந்திப்பின்போதே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

மாவட்டத் தலைவர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் ஆகியோர் நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

மஹிந்த ராஜபக்ஷ பெரும்பான்மை வாக்குகளால் உருவாக்கப்பட்ட அரசாங்கத்தின் பிரதமர் என்றும் மக்களின் இறையாண்மைக்கு பிரதமர் தலைவணங்கினால் அவர் தொடர்ந்தும் அந்த பதவியில் நீடிக்க வேண்டும் எனவும் பிரதேச சபைகளின் தவிசாளர்களும் மேயர்களும் ஏகமனதாக தெரிவித்தனர்.

அதற்கமைய மேற்படி தீர்மானத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து தெரிவிக்கவும் பிரதேச சபைகளின் தலைவர்கள் மற்றும் மேயர்கள் தீர்மானித்தனர்.

மஹிந்த ராஜபக்ஷ என்ற பெயரையும் உருவப்படத்தையும் பயன்படுத்தி பாராளுமன்றத்துக்கு வந்த ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு பிரதமரை பாதுகாக்கும் பொறுப்பும் கடமையும் உண்டு என கூறிய உள்ளூராட்சி மன்ற தலைவர்கள், நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இத்தருணத்தில் அரசாங்கத்தை சீர்குலைத்து சுயாதீனமாக செயற்படுவதற்கு எவ்வித உரிமையும் இல்லையென்றும் குறிப்பிட்டனர்.

அவ்வாறு சுயாதீனமாக செயற்படுவதற்கு தயாராகவிருக்கும் அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பதிலடி கொடுக்க அடிமட்ட மக்கள் தயாராக இருக்க வேண்டும் எனவும் இருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்களும் மேயர்களும் தெரிவித்துள்ளனர்.

## இலங்கைக்கு 600 மில்... (03 ஆம் பக்கத் தொடர்)

மற்றும் எரிவாயு தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்த நிதி பயன்படுத்தப்படும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்குவதாகவும் உலக வங்கி பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

உலக வங்கியின் இந்நாட்டு ஆலோசகர் ஹூசாம் அபுதாகா (*Husam Abudagga*), மனித அபிவிருத்தித் தலைவர் ரெனே சோலானோ (*Rene Solano*), நிதி அமைச்சர் அலி சப்ரி, வர்த்தக மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சர் ஷெஹான் சேமசிங்ஹ, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## தப்பிச் செல்வதை... (03 ஆம் பக்கத் தொடர்)

எதிர்நோக்கும் முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகளுக்கு உடனடியாக பயணத்தடை விதிக்கப்பட வேண்டுமென சட்ட

மாஅதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். சட்டத்தரணிகள் சங்கம் முன்வைத்த கோரிக்கைக்கு சட்ட மாஅதிபர் சாதகமான பதில் வழங்கியதாக அவர் குறிப்பிட்டார். (பா)

## தமிழ் எம்.பிக்களை ... (03 ஆம் பக்கத் தொடர்)

தமிழ் தேசிய கூட்டமைப்பு கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் சலுகைகளைப் பெற்றிருந்தது. ஆனால் தமிழ் மக்களுக்கு இந்த சலுகைகளும் கிடைக்கவில்லை. இவர்களை வெளியேற்றிவிட்டு யாரை நம்ப போகின்றோம் என்ற கேள்வி இருக்கிறது. ஆகவே அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் நடுநிலைமை வகிக்க வேண்டும் என்பது எனது கருத்து.

ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கை இல்லா தீர்மானம் எடுக்கப்பட்டால் அவருக்கு எதிராக செயற்பட வேண்டும் என்பதே எனது கருத்து.

ஜனாதிபதி என்பதில் அவர் செய்த பிழைகள் இருக்கின்றன. அதேபோல பாதுகாப்புச் செயலாளராக இருந்த போது செய்த பிழைகள் பல இருக்கின்றன.ஆனால் ஜனாதிபதி என்ற முறையில் அவர் செய்த பிழைகள் என்று எடுத்து பார்ப்போமானால் முதலாவதாக பதவிக்கு வந்தவுடன் 2019 நாட்டுக்கு பெற வேண்டிய வரிகளை குறைத்து. தனது ஆதரவாளர்களுக்கு நன்மையை கொடுக்கும் வண்ணம் பெருவாரியான வருமானத்தை இல்லாமல் செய்தது குற்றம்.

ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணையை கொண்டு வந்தால் அதனை ஆதரிக்க வேண்டும். உண்மையும் இதுதான். அவரது கையாலாகாத்தனத்தினாலேயே நாடு மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது என்றார்.

## அரசு நிறுவனங்களின் ... (03 ஆம் பக்கத் தொடர்)

மாத்திரமே அரச திறைசேரிக்கு மாற்றப்பட்டுள்ளமை தொடர்பில் கோப் குழு விசேட கவனம் செலுத்தியது.

இதன்போது கோப் குழுவின் தலைவர் குறிப்பிடுகையில்,

14.4 மில்லியன் ரூபாய் கடனாளிகளை திறைசேரியின் அனுமதியின்றி தள்ளுபடி செய்தமை தொடர்பில் கோப் குழு வினவியது. நிறுவன கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அனுமதியைப் பெற்று 2007 இல் அப்போதைய பணிப்பாளர் சபையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதன்போது கோப் குழுவின் தலைவர் தெரிவிக்கையில், அரசாங்கக் கடன்கள் தொடர்பான ஒருங்கிணைந்த நிதிக்கு திறைசேரியின் செயலாளரே பொறுப்பாக இருப்பதால், அவ்வாறு கடனாளிகளை தள்ளுபடிசெய்வதாயின் அது தொடர்பில் பிரதான கணக்காளரினால் திறைசேரியின் செயலாளருக்கு அறிவித்து அனுமதி பெறவேண்டுமெனக் குறிப்பிட்டார்.

## இலங்கைக்கு மனிதாபிமான... (03 ஆம் பக்கத் தொடர்)

பங்கு மற்றும் மோதலுக்குப் பிந்தைய மறுவாழ்வு மற்றும் நல்லிணக்கத்துக்கு உதவுவதில் அதன் தற்போதையவகிபாகம்மற்றும்ஆயுதப்படைகள், பொலிசார் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும் ஐ.எச்.எல். பயிற்சி ஆகியவற்றையும் அவர் நினைவு கூர்ந்தார்.

தற்போதைய பொருளாதார சவால்கள் குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸின் விளக்கத்துக்கு பதிலளிக்கும் வகையில், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக இலங்கைக்கு மருத்துவப் பொருட்களை நன்கொடையாக வழங்குமென பெட்ரிடிஸ் தெரிவித்த அதே வேளை, அரசாங்கத்தின் தேவைகளின் அடிப்படையில் மனிதாபிமான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் மேலும் சுட்டிக்காட்டினார்.

## ஜனாதிபதியின் தலைமையில்... (03 ஆம் பக்கத்தொடர்)

நடத்தப்படுமென அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. அதேவேளை, எதிர்க்கட்சியைச் சேர்ந்த கட்சித்தலைவர்களின் மாநாடு எதிர்வரும் வாரத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தன. (ஸ)

## இன்று பாராளுமன்றில்... (03 ஆம் பக்கத் தொடர்)

திருத்தத்தை கையளித்துள்ளன. இதேவேளை, அடுத்தவாரம் பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறும் விதம் மற்றும் அவற்றின் நிகழ்ச்சி நிரல் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

## சகல கட்சிகளுடன் பேச... (03 ஆம் பக்கத் தொடர்)

இடைக்கால அரசில் அங்கம் வகிக்கப்போவதில்லையென ஐ.ம.சவும் ஜே.விபியும் ஏற்கெனவே அறிவித்துள்ளன. இந்த நிலையில் சுயாதீன குழு அவர்களுடன் பேச உள்ளதோடு தமிழ் கட்சிகளுடனும் பேச்சு நடத்த திட்டமிட்டுள்ளது. (பா)

## இடைக்கால அரசுக்கு...

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், இந்த அரசும் பதவி விலகவேண்டும். இதுதான் மக்களின் கோரிக்கை. எமது நிலைப்பாடும் இதுவாகவே உள்ளது.

அவர்கள் பதவி விலகிய பின்னர் குறுகிய காலப்பகுதிக்கு இடைக்கால அரசு அமைக்கப்பட வேண்டும். அதன் பின்னர் பொதுத் தேர்தலுக்குச் செல்ல வேண்டும் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## கடன் நெருக்கடியை போக்க...

பணவியல் கொள்கைகளை கடுமையாக்க வேண்டும், வரிகளை உயர்த்த வேண்டும், நெகிழ்வான நாணய மாற்று வீதங்களை பின்பற்ற வேண்டுமென்றும் ஆன் மாரி தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் அதிகாரிகளுடன் நடந்த பேச்சுவார்த்தையில் பயனுள்ள பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

22 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட இலங்கை கடன் நெருக்கடி மற்றும் உயர்ந்து வரும் பணவீக்கம், இறக்குமதிக்கான அந்நிய செலாவணி கையிருப்பு வீழ்ச்சி என்பவற்றுக்கு மத்தியில் போராடும்இச்சந்தர்ப்பத்தில் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் கோரியுள்ளது.

இந்நிலையில் கடந்த இரு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தையில் நாம் மிகவும் நல்ல பல பயனுள்ள தொழில்நுட்ப விவாதங்களை நடத்தினோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் நிதி அமைச்சர் அலி சப்ரி கடந்த வாரம் வாஷிங்கடனில் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் இந்திய உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதுடன் இலங்கையின் கடன் நெருக்கடியை தீர்க்கும் வகையில் உதவிகளையும் கோரியுள்ளார்.

இலங்கை 51 பில்லியன் கடனில் சில பகுதிகளை தற்போது நிறுத்தியுள்ளது.

இது தொடர்பில் ஆன் மாரி கூறுகையில்,

நிதிகூற்றுக்கான தேவையானது கடன் நிலை தன்மையை நோக்கிய முன்னேற்றமாக இருக்கும் என்பதுடன் முக்கியமான செலவு தொகைகளை நிவர்த்தி செய்வதற்கு வரி வருவாயை அதிகரிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் பணவீக்கத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள பணவியல் கொள்கைகளை கடுமையாக்க வேண்டும் என்றும் நெகிழ்வான நாணயமாற்று வீதங்களின் தேவையை நாங்கள் காண்கிறோம் என்றும் தெரிவித்தார்.

இந்நிலையில் சர்வதேச நாணயநிதியம் இலங்கைக்கு வழங்க உள்ள மொத்த நிதி மற்றும் இலங்கையுடன் பேச்சுவார்த்தைகள் நிறைவடையும் காலம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்க மறுத்து விட்டார்.

## இடைக்கால அரசாங்கம் அமைக்க...

அரசாங்கத்தின் திட்டங்கள் மற்றும் தற்போதைய பிரதமர் மற்றும் அமைச்சரவை இராஜினாமா செய்ததன் பின்னர் சர்வகட்சி அரசாங்கத்தை எவ்வாறு அமைப்பது என்பது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

அதேவேளை நேற்றைய தினம் பொதுஜன பெரமுன கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி விசேட பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொண்டுள்ளார். பொதுஜன பெரமுன கட்சியின் பெரும்பாலானோர் இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு வசதியாக பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் முழுமையாக இராஜினாமாச் செய்ய வேண்டுமென்பதே பொதுஜன பெரமுன கட்சியின் பெரும்பாலானோரின் விருப்பமாகுமென்று அவர்கள் ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளனர்.

அதே வேளை சர்வகட்சி இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில் அரசாங்கத்திலிருந்து சுயாதீனமாக செயற்படும் 11 கட்சிகள் ஏகமனதான தீர்மானத்தை தெரிவித்துள்ளன. அந்தக் கட்சிகளின் தலைவர்கள் நேற்று முன்தினம் கொழும்பில் கூடி கலந்துரையாடிய பின்னரே இந்த தீர்மானத்தை அறிவித்துள்ளனர்.

அந்த சந்திப்பில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஏனைய கட்சித் தலைவர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

அதேவேளை சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட அனைத்து கட்சிகளுக்கும் ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்துள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பில் அரசாங்கத்தின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆளும் கட்சி முக்கியஸ்தர்களுடன் இன்று ஜனாதிபதி முக்கிய பேச்சுவார்த்தையொன்றை நடத்தவுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தை இன்றைய தினம் பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளதுடன் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## பெரும்பான்மை இல்லையெனில் நான் உடனே...

தெரிவிக்கையில், பாராளுமன்றப் பெரும்பான்மை எனக்கு இருக்கும் வரை என்னை யாரும் பிரதமர் பதவியிலிருந்து அகற்ற முடியாது. பாராளுமன்றத்துக்கு வெளியில் போராட்டம் நடத்தும் மக்களின் குரலிலே அவர்களது கோரிக்கை எனக்குக் கேட்கின்றது. அவை பேசித் தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள்.

ஒவ்வொரு அரசு வரும்போதும் மக்கள் போராட்டங்கள் நடக்கும். மக்கள் போராட்டங்களுக்காக அரசுகள் விலகுவதென்றால் எந்த அரசும் இந்த நாட்டில் இருக்க முடியாது. ஜனநாயக நாட்டில் போராட்டங்கள் நடப்பது வழமை. அவற்றின் கருத்துகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவை.

ஆனால், அதற்காக ஜனநாயக விரோத முறையில் அரசுகளைக் கலைக்க வேண்டும் என்பதல்ல. 2015 இல் ஜனாதிபதித் தேர்தல் முடிவு அறிவிக்கப்படும் முன்னரேயே, உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து புறப்பட்டு விட்டேன். ஜனநாயகத்துக்கு முரணான வகையில் பதவியைப் பிடித்து வைத்திருக்கும் எண்ணம் எனக்கு கிடையாது.

ஆனால், இப்போது ஜனநாயக ரீதியில் பெரும்பான்மை என் பக்கம்தான் உள்ளது. ஆகவே, நான் பிரதமராகப் பதவியில் நீடிப்பேன். அது மக்கள் தீர்ப்பு. சம்பந்தப்பட்டோர் இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

வெளியில் ஆர்ப்பாட்டம் நடத்துவோர் எங்களோடு பேசலாம். பேசித் தீர்ப்பதற்கான வாய்ப்பை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் கோருகின்றேன் என திட்டவட்டமாக எடுத்துரைத்துள்ளார்.

## உயிரிழந்தோரின் சடலங்கள்...

புதன்கிழமை (27) காலை அம்பாறை புத்தங்கல பொது மயானத்தில் தோண்டி எடுக்கப்பட்டது.

மூன்றாவது தடவையாக மேற்கொள்ளப்படவுள்ள இப்பிரேத பரிசோதனையானது அம்பாறை பிரதான மாவட்ட நீதிபதி மற்றும் நீதிவானுமாகிய லுசாகா குமாரி தர்மகீர்த்தி முன்னிலையில் சட்ட வைத்திய அதிகாரிகளான என். டபிள்யு.தினுகா மதுசானி மற்றும் ருச்சிர நதீர ஆகியோருடன் இரசாயன பகுப்பாய்வாளர் வனிதா பண்டாரநாயக்க தடயவியல் பொலிஸ் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பிரசன்னத்துடன் சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டது.

இந்நடவடிக்கையானது கட்டுவாபிட்டிய தேவாலயத்தில் தாக்குதல் நடத்திய தற்கொலை குண்டுதாரியின் மனைவி புலஸ்தினி மகேந்திரன் (சாரா ஜெஸ்மின்) என்பவர் தொடர்பான டி.என்.ஏ பரிசோதனைக்காக சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டு வருவதான பொலிஸ் உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். அத்துடன் சம்பவ இடத்திற்கு அருகில் ஊடக அனுமதி மறுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சாய்ந்தமருது பகுதியில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 17 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈஸ்டர் தொடர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் சாரா ஜஸ்மின் இறந்ததாக இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

சாரா தொடர்பான மர்மங்கள் நீடித்து வரும் நிலையில் அவர் தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

சாராவை அடையாளம் காண உடல் உறுப்புகள் டிஎன்ஏ சோதனைக்கு உட்படுத்தப்படுவது இது மூன்றாவது முறையாகும் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

## சிற்றுண்டிகளின் விலைகள்...

எடைகொண்ட லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 2,185 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 12.5 கிலோகிராம் எடைகொண்ட லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலனின் புதிய விலை 4,860 ரூபாவாகுமென லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

1,071 ரூபாவாக காணப்பட்ட 05 கிலோ கிராம் எடைகொண்ட சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 874 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 1,945 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

506 ரூபாவாக இருந்த 2.3 கிலோகிராம் எடைகொண்ட சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 404 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு 910 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளதென லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இதனை தொடர்ந்து, சமையல் எரிவாயு விலை அதிகரிப்புக்கு அமைய உணவகங்களில் விலை அதிகரிப்பை மேற்கொள்வது தொடர்பான தீர்மானத்தை எடுக்கும் பொறுப்பு அதன் உரிமையாளர்களுக்கே வழங்குவதாக உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டமையால் தேநீர், பால் தேநீர், உணவுப்பொதி, அப்பம், பரோட்டா, கொத்து உட்பட சிற்றுண்டிகளின் விலைகள் அதிகரிக்குமென தெரிவிக்கப்படுகின்றது.

ஏனெனில் தாங்கள் விலை அதிகரிப்பை மேற்கொண்டால் உண்மையில் இந்த தொழிற்துறை வீழ்ச்சியடையுமென சிற்றுண்டி உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

## தேர் மீது மின்சாரம்...

04 கி.மீ. தொலைவிலுள்ள களிமேடு கிராமத்தில் 150 ஆண்டுகளுக்கு முன்பு அப்பர் மடம் அமைக்கப்பட்டது. இந்த மடத்தில் ஆண்டுதோறும் சித்திரை மாத சதய நட்சத்திர நாளில் அப்பர் சதய விழா மிக விமரிசையாகக் கொண்டாடப்படுவது வழக்கம். இதன்படி 94 ஆம் ஆண்டாக மூன்று நாள் அப்பர் சதய விழா நேற்று தொடங்கியது. வெகு விமரிசையாக நடைபெற்று வந்த இத்திருவிழாவில் இரவில் மின் அலங்கார தேர் புறப்பாடு தொடங்கியது.

இதில் அப்பர் படம் வைத்து இழுத்து வரப்பட்டது. தொடர்ந்து களிமேடு கிராமத்திலுள்ள நான்கு வீதிகளிலும் தேர் வலம் வந்தது.

நேற்று (27) அதிகாலை 3.15 மணியளவில் கீழத் தெருவிலிருந்து முதன்மைச் சாலைக்கு வந்த இத்தேர் திருப்பத்தில் திரும்பியபோது, மேலே சுமார் 30 அடி உயரத்திலுள்ள உயரழுத்த மின் பாதையில் தேரின் அலங்கார தட்டி உரசியது. இதனால் தேரை இழுத்து வந்த மக்கள் மீதும், சுற்றி இருந்தவர்கள் மீதும் மின்சாரம் பாய்ந்தது.

இவர்களில் களிமேடு கிராமத்தைச் சேர்ந்த 11 பேர் உட்பட, 14 பேர் உயிரிந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்தன.

## சென். ஜோசப் கல்லூரியில்...

ஏற்பட்டுள்ளது. நேற்று 12:25 மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் மேற்படி தீ அனர்த்தம் ஏற்பட்டதாகவும் இந்த அனர்த்தத்தில் எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லையென்றும் சேதங்கள் தொடர்ந்தும் இதுவரை மதிப்பிடவில்லை என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

கட்டடமொன்றில் தீ பற்றியதுடன் உடனடியாகவே தீயணைக்கும் படையினர் வருகை தந்து தீ பரவலை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

05 வாகனங்களில் 18 தீயணைப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள் வருகை தந்து தீயணைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

## டொலரின் விற்பனை விலை...

நெருக்கடியில் ரூபாவின் மதிப்பு நாள்தோறும் சரிவடைந்து வருகிறது. அதேவேளை நேற்று முன்தினம் மத்திய வங்கியினால் அறிவிக்கப்பட்ட அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 333.88 ரூபாவாக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரச ஊழியர்களது சம்பளம்...

நிதி அமைச்சின் செயலாளரினால் அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு நேற்று முன்தினம் அனுப்பப்பட்டுள்ளது.

## இடைக்கால அரசுக்கு SJB ஆதரவு...

நாங்கள் கைப்பொம்மை இடைக்கால அரசாங்கத்தை ஆதரிக்கவிரும்பவில்லை. நாட்டின் பொருளாதாரத்துக்கு புத்துயுர் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கான உரிய அதிகாரங்கள் எதிர்க்கட்சித் தலைவருக்கு அவசியமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனை நிறைவேற்றுவதற்கு அவருக்கு நிபுணர்களின் உரிய ஆதரவுள்ளதெனவும் இதன் காரணமாகவே நாங்கள் ஜனாதிபதியை உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கத்தை ஏற்கவில்லை.

ராஜபக்ஷவினர் இல்லாத அரசாங்கத்தை அமைப்பதே எங்கள் நோக்கமெனவும் அவர் தெரிவித்துள்ளார். ராஜபக்ஷவினரைத் தவிர வேறு எவரும் தலைமைதாங்கும் இடைக்கால அரசாங்கத்தை ஆதரிக்க தயாரெனவும் அவர் தெரிவித்துள்ளார். ராஜபக்ஷவினர் பதவி விலகவேண்டும் அல்லது ஐக்கிய மக்கள் சக்திக்கு தற்போதைய நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கான மக்கள் ஆணையை வழங்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

## மின் கட்டணத்தை நினைத்த...

அத்தியாவசிய பொருட்களின் விலையை அதிகரிப்பதை போன்று மின்கட்டணத்தை அதிகரிக்க முடியாதென இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நேற்று (26) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில், மின்கட்டணத்தை அதிகரிக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு முழுமையாக அனுமதி வழங்கியுள்ளதாக சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள செய்தி அடிப்படையற்றது.

மின்கட்டண அதிகரிப்புக்கு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை.

## பசில், சஜித் , ரணில் மூவருக்கிடையில்...

வேண்டுமென்றே காலதாமதப்படுத்தி வருகின்றனர். முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும், பசில் ராஜபக்ஷவுக்குமிடையில் டீல் அரசியல் இடம்பெறுவதை அவதானிக்க முடிவதாக அரசாங்கத்திலிருந்த விலகி சுயாதீனமாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டு மக்களின் அரசியல் நிலைப்பாட்டுக்கும், கருத்துகளுக்கும் அரச தலைவர்கள் மதிப்பளிப்பதில்லை. அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காக பல விடயங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இடைக்கால அரசாங்கம் குறித்து ஜனாதிபதி குறிப்பிடும் கருத்துக்களின் மீது துளியளவிலும் நம்பிக்கை கிடையாதென்றும் அவர் தெரிவித்தார்.

## நாடு முழுவதும் இன்று...

துறைகள் அனைத்தும் இந்த ஒரு நாள் வேலைநிறுத்தத்தை முன்னெடுக்க முடிவு செய்துள்ளதாக அவர் கூறினார். இது தொடர்பில் வசந்த சமரசிங்க மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு மக்களின் குரலுக்கு செவிசாய்க்காமல் தன்னிச்சையான பயணத்தை மேற்கொள்ள அரசாங்கம் தயாராகி வருகிறது. எனவே இந்த நாட்டின் உழைக்கும் மக்களாகிய நாங்கள் இன்று வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அரசாங்கத்திடம் கூறுகின்றோம். காலிமுகத்திடலில் போராடும் இளைஞர்கள் தங்கள் எதிர்காலத்திற்காக போராடுகிறார்கள். ஆட்சியாளர்களை வீட்டுக்குப் போகச் சொல்கிறார்கள். இந்த நாட்டிலுள்ள அனைத்து உழைக்கும் வர்க்கத்தினரும் இணைந்து இன்று முழுப் பொது வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம். வேலைநிறுத்தத்தையடுத்து எதிர்வரும் 06ஆம் திகதி ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இன்று வேலை நிறுத்தம் மற்றும் கூட்டு ஹர்த்தாலில் ஈடுபடுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக தொழிற்சங்க ஒருங்கிணைப்பு மையம் தெரிவித்துள்ளது.

# நகர்வலம்



# தனியார் துறையினருடன் இணைந்து புதிய உணவுப் பயிர்ச் செய்கை

## இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் திட்டம்

*மாவத்தகம தினகரன் நிருபர்*



தனியார் துறையினருடன் இணைந்து புதிய உணவுப் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக கிராமியப் பொருளாதார பயிர் மற்றும் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உதவியுடன் புதிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் வகையில் புதிய உணவுப் பயிர்களை அறிமுகப்படுத்தவும் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தவும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தலைவர் டாக்டர் தோமஸ் கிரிங்க் தலைமையிலான குழுவினருடன் கிராமிய பொருளாதார பயிர் மற்றும் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆகிய இரு தரப்பினர்களுக்கிடையிலான சந்திப்பு அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இது பற்றி அமைச்சர் கருத்து தெரிவிக்கையில்,..

தனியார் துறையினருடன் இணைந்து கிராம மட்டத்தில் புதிய பயிர்ச் செய்கைகளை அறிமுகப்படுத்துதல் சாகுபடியை பராமரிக்க தேவையான தொழில் நுட்ப மற்றும் பயிற்சிகளை வழங்குதல் தொடர்பில் பரிந்துரை செய்யப்பட்டது. அத்தோடு எதிர்காலத்தில் அந்த நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. சுகாதார முறையில் பயிர்ச் செய்கையை மேற்கொள்வது பற்றி கூடுதல் கவனம் செலுத்துதல் போன்ற விடயங்ககள் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். இதன் போது அமைச்சரின் உதவி செயலாளர் அமல் ஹஷத் சில்வா, அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.



கொழும்பு டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரியின் வருடாந்த இப்தார் வைபவம் பாடசலை விளையாட்டு மண்டபத்தில் நடைபெற்று. பிரதம அதிதியாக எம். முஸ்லிம் சலாஹுதீன் (பழைய மாணவர்) நட்வி பஹ்வதீன் (பழைய மாணவர்) ஆகியோர் கலந்து சிறப்பித்ததோடு பாடசாலையின் அதிபர் பிரசன்ன உடுமுகந்திரம், விழா ஏற்பாட்டுக் குழு ஆசிரியர் மௌலவி மாஹிர், மஜ்லிஸின் பொறுப்பாசிரியை பிர்தௌசியா பாறூக், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்...

# முச்சக்கர வண்டி ஓட்டுநர்களிடம் கட்டணம் அறவிடுவது நிறுத்தப்பட்டது

*புத்தளம் தினகரன் நிருபர்*

முச்சக்கர வண்டி ஓட்டுநர்களிடம் மறு அறிவித்தல் வரை தரிப்பிடக் கட்டணங்களை அறவிடுவதில்லையென புத்தளம் நகரசபை தீர்மானித்துள்ளது. தற்போது நாட்டில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருட்களின் விலை அதிகரிப்பு என்பவற்றால், பாதிக்கப்பட்டுள்ள முச்சக்கரவண்டி ஓட்டுநர்களுக்கு இந்தச்சலுகை வழங்கப்பட்டுள்ளது. இதுபற்றி, புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் அறிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடி நிலைமை அறிந்து இவ்வாறான சலுகையை வழங்கியதையிட்டு முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கமும் அண்மையில் நகரபிதாவை சந்தித்து தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளது.

# எழுபது குளங்களை அபிவிருத்தி செய்ய திட்டம்

*திறப்பனை தினகரன் நிருபர்*

ஹொரவப்பதான, கஹட்டகஸ் திகிலிய, ஹிங்குரங்கொட ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள 70 குளங்களை இவ் வருடத்திற்குள் அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக வேலைத்திட்டப் பிரிவு தெரிவித்துள்ளது.

உலக வங்கி நிதி உதவித் திட்டத்தின் கீழ் இது நடைமுறைபடுத்தப்படவுள்ளன.

சிறிய குளங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ் இவ் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதோடு, இவ் வருட சிறுபோக மற்றும் பெரும்போக விவசாய நடவடிக்கைகளுக்கான நீர்ப்பாசன வசதியை பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கமாகும். இதற்காக உலக வங்கி 500 மில்லியன் ரூபா பணத்தை ஒதுக்கீடு செய்துள்ளதாக 'வாரி சுகுறு' அபிவிருத்தி திட்டப்பிரிவு தெரிவித்துள்ளது.



உடப்பூரின் வருடாந்த சித்திரைச் செவ்வாய் நிகழ்வு மிகவும் பக்தியாக புதன்கிழமை காலை(27) நடைபெற்றது. மாரியம்மன் அம்பாளின் அருளைப் பெற்றுக் கொள்ளும் முழு நோக்குடனும், இந்த நிகழ்வு காலம் காலமாக நடைபெறுகிறது. இந்த வெப்ப காலத்தில் மக்களுக்கு அம்மை நோய் வருவதை நிவர்த்தி செய்யும் முகமாகவும், மழையை வேண்டியும் இது நடைபெறுகின்றது. படம்: உடப்பு குறூப் நிருபர்

# உலர் உணவுப் பொதிகள் வழங்கல்

*பெரியநீலாவணை விசேட நிருபர்*



றிஸ்லி முஸ்தபா கல்வி மற்றும் சமூக நல உதவித் திட்ட அமைப்பின் பங்களிப்புடன் மயோன் ஸ்டார் லைப் அமையத்துடன் இணைந்து சம்மாந்துறை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு சம்மாந்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பொது மக்கள் எதிர்வரும் நோன்புப் பெருநாளை சிறப்பாக கொண்டாடும் முகமாக இவ் உலர் உணவுப் பொதிகள் மயோன் குரூப் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் றிஸ்லி முஸ்தபாவினால் வழங்கி வைக்கப்பட்டது .

இன் நிகழ்வில் மயோன் ஸ்டார் லைப் அமைப்பின் தலைவர் எம்.எம்.ரபீக், அமைப்பின் பெண்கள் பிரிவு தலைவி எம்.எம்.பாயிஸா உட்பட அமைப்பின் சம்மாந்துறை பொறுப்பாளர்களான ஏ.எம்.பாரிஸ், ஷபி ஸையித் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் பாணந்துறை அல்பஹ்றியா மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை ) எட்டு மாணவர்கள் சிறந்த புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளனர். எம்.ஜே.எப்.ருகையா168, எம்.ஆர்.எப்.சாரா166, எம்.ஐ.எம்.அம்ஹர்163, எம்.எஸ்.ஹனா, 157, எம்.ஏ.ஏ.ஸைனப்156, எம்,ஆர்,ஐ.எப்.ராழியா156, எம்.ஐ.அப்துல் ரஸ்ஸாக்153, எம்.ஆமினா பைஸர்152 ஆகிய மாணவ, மாணவிகள் சித்தி பெற்றுள்ளனர். மேலும், இக்கல்லூரியில் 42 மாணவர்கள் நூற்றுக்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்று சித்தியடைந்ததும் குறிப்பிடத்தக்கது. படம்:பாணந்துறைமத்திய குறூப் நிருபர்




கொழும்பு நகரை தலைமையமாக கொண்டு, இயங்கி வரும், பெண்களுக்கான அழகு கலை நிறுவனமான 'ளுவயசனழஅ யுஉயனநஅல'யில் கல்வி கற்ற மாணவிகளுக்கான முதல் கட்ட கற்கை நெறியை பூர்த்தி செய்து கொண்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், பரிசளிப்பு விழாவும், கொழும்பு பழைய தபாற்கந்தோர் கேட்போர் கூடத்தில், அதன் பணிப்பாளர் என். ஹம்ஸியா மற்றும் இயக்குநர் எச். ஏ. எம். ஆஸிப் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது. படங்கள்: மாவத்தகம தினகரன் நிருபர்

# கற்பிட்டி அல்அக்ஸா வித்தியாலயத்தில் முப்பெரும் விழாக்கள்

*புத்தளம் தினகரன் நிருபர்*



கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் முப்பெரும் விழாக்கள் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றன.

பாடசாலை அதிபர் உள்ளிட்ட பழைய மாணவர்கள் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்கம் என்பன புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமிடம் முன்வைத்த வேலை திட்டங்களில் மூன்று வேலைத் திட்டங்கள் பாராளுமன்ற உறுப்பினரால் நிறைவேற்றப்பட்டன.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் நிதி ஒதுக்கீட்டில், பெண்கள் பகுதி பிரதான நுழைவாயிலுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு, மர்ஹூம் தம்பி நெய்னா மரிக்கார் புதிய மாடிக் கட்டட ஜன்னல்களுக்கு பாதுகாப்பு நெட் அமைத்தல், ஒவ்வொரு வருடமும் தேவையுடைய மாணவர்களை தேர்ந்தெடுத்து பீ.சீ.எம்.எச் நிறுவனத்தினூடாக மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்குதல், என்பவையே முப்பெரும் நிகழ்வுகளாக நடைபெற்றன. அதிபர் ரோஸ் புகாரி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கலந்து கொண்டதுடன், கற்பிட்டி பிரதேச சபை தலைவர் ஏ.எம்.இன்பாஸ், கற்பிட்டி பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர் ஜே.எம்.தாரிக், பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் ஜவ்சி ஜமால்தீன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# ஊர்ப்பிரமுகர்கள் பங்கேற்ற இப்தார் நிகழ்வு

*கல்நேவ தினகரன் விசேட நிருபர்*

புனித நோன்பை முன்னிட்டு நேகம ரியால்தீன் பௌன்டேசன் ஏற்பாட்டில் நடந்த இப்தார் நிகழ்வு, நேகம மொஹிதீன் ஜும்ஆ மஸ்ஜிதில் மௌலவி எஸ்.டீ.எம்.இர்ஷாட் தலைமையில் (23) இடம்பெற்றது.

இந்நிகழ்வில், ஊரிலுள்ள கல்விமான்கள், ஜமாஆத்தினர் மற்றும் சமூக சேவை நலன் விரும்பிகள், பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். விஷேட அதிதியாக கல்நேவ பொலிஸ் நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் எஸ்.முனசிங்க கலந்து கொண்டார்.

# தர்மசக்தி ஏற்பாடு செய்த சர்வமத நல்லிணக்க இப்தார் நிகழ்வு

*ஏ.எஸ்.எம்.ஜாவித்*

தர்மசக்தி அமைப்பு மற்றும் கிரேன்ட்பாஸ் மத நல்லிணக்க சபை என்பன இணைந்து முதல் முறையாக இப்தார் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

மத நல்லிணக்கத்தை நோக்காகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இப்தார், வெள்ளவத்தை மெதடிஸ் தேவாலயத்தில் கடந்த திங்கட்கிழமை (25) இடம்பெற்றது.

இந்நிகழ்வில், தர்மசக்தி அமைப்பின் தலைவர் பல்லே கந்த ரத்னசார ஹிமி, உப தலைவர் அருட்தந்தை ஆசிரிபெரேரா, செயலாளர் மாதம்பாகம அஸ்ஸஜீ நாயக்க ஹிம,உப செயலாளர் அனுர பெரேரா, பொருளாளர் அஷ் ஷேக் பிர்தௌஸ், மற்றும் கிரேன்ட்பாஸ் மத நல்லிணக்க சபையின் பிரதித் தலைவர் அஷ் ஷேக் ஷாபி ரஷாதி, செயலாளர் அஷ் ஷேக் பஹ்மி ஸாதாத் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அத்தோடு அ.இ.ஜம்இய்யதுல் உலமாவின் உப செயலாளர் அஷ் ஷேக் தாஸிம் மௌலவி மற்றும் உலமாக்கள், சகோதர மதத் தலைவர்கள், அல் ஹாஜ் இப்ராஹிம், வெள்ளவத்தை தெஹிவளை பகுதியைச் சேர்ந்த பள்ளிவாசல் நிர்வாகிகள், கிரேன்ட்பாஸ் மஸ்ஜித் முஹியத்தீன் ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திகதி 26.04.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4744
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.12,399,020.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,896,043.00
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 8 1 1 2 8 4

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 774
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,003,040.00
வெற்றி இலக்கினம் V வெற்றி இலக்கங்கள் 07 14 27 49
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 108,870,127.20

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0053
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,717,460.00
இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 06 36 37 48
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,957,522.40

கோடி 24+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1092
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,840,420.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 249,084,154.00
J 01 08 35 46 54
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01




# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை அமெரிக்கத் தூதுவர் சந்திப்பு

**யாழ்.விசேட நிருபர்**

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க பிரதிநிதிகளை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் சந்தித்து கலந்துரையாடினர்.

கொக்குவிலில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இச்சந்திப்பு இடம் பெற்றது.

சந்திப்புக்கு பின்னர் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜா கருத்து தெரிவிக்கையில்,

எமது உறவுகள் காணாமலாக்கப்பட்ட விதம், எமது போராட்டங்கள், எமக்குள்ள பிரச்சினைகள் தொடர்பாக அமெரிக்க தூதுவரிடம் நாம் விளக்கிக் கூறியிருந்தோம்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் எமது எதிர்ப்பையும் மீறி உருவாக்கப்பட்டது என்பதை அவருக்கு தெளிவாக கூறியதுடன் அந்த அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட சில விவரங்களுக்கு இதுவரை நடவடிக்கையை எடுக்கப்படாமை தொடர்பாகவும் கூறியிருந்தோம்.

அத்துடன் மீண்டும் ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை நம்புமாறு எம் மீது அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டாம் என தெரிவித்திருந்தோம்.

நாம் இலங்கையின் நீதிப் பொறிமுறையில் நம்பிக்கையில்லை எனவும் சர்வதேச நீதிப் பொறிமுறையே எமக்கு வேண்டும் எனத் தெரிவித்தோம் என்றார்.



## யாழ். முஸ்லிம் பிரதிநிதிகளை அமெரிக்க தூதுவர் சந்தித்தார்



**யாழ்.விசேட நிருபர்**

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ் மாவட்ட முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கண்டறியும் நோக்கில் மக்கள் பணிமனையின் தலைவர் மௌலவி எஸ்.ஏ.சுபியானுடன் சந்திப்பில் ஈடுபட்டார்.

நாவாந்துறை வீதியில் அமைந்துள்ள மக்கள் பணிமனை அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இதில் மீளக்குடியேறியுள்ள மக்களுக்கான காணி, வீட்டுத்திட்டம், வாழ்வாதாரம் இன்மை போன்ற பிரச்சினைகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டதுடன் மகஜரும் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடந்த அரசாங்கமோ, தற்போதைய அரசாங்கமோ கருத்திற்கொள்ளவில்லை. முஸ்லிம் வாழ் சமூகத்தினர் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் யாழ் முஸ்லிம் மாவட்ட மக்கள் பணிமனையின் தலைவர் மௌலவி எஸ்.ஏ.சுபியான் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.



கனடா வாழ் தமிழ் எழுத்தாளர் அருண் செல்லப்பா அண்மையில் அச்சுவேலிக்கு வருகைதந்து நினைத்தாலே இனிக்கும், அவளுக்கு என்று ஒரு மனம், சொல்லத்தான் நினைக்கிறேன் என மூன்று நாவல்களை வெளியிட்டார். நூல்களை அம்பாறை மாவட்ட இளைப்பாறிய மேலதிக அரச அதிபர் இராமகிருஷ்ணன் செல்லத்துரை வெளியிட்டு வைப்பதையும் நூலாசிரியர் உள்ளிட்ட விருந்தினர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## வவுனியாவில் அதிகரிக்கும் திருட்டு சம்பவங்கள்

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியாவில் திருட்டு சம்பவங்கள் அதிகரித்து செல்வதை அவதானிக்க முடிகின்றது.

குருமன்காடு, யாழ் வீதி, இறம்பைக்குளம், கோவில்குளம் ஆகிய பகுதிகளில் கடந்த சில நாட்களில் சங்கிலி அறுப்பு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளது. நேற்றையதினம் இறம்பைக்குளத்தில் தனிமையில் இருந்த வயோதிப பெண்ணிடம் கத்தியை காட்டி பணம் மற்றும் தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளது. இதேவேளை கோவில் குளத்திலும் பெண்ணொருவரிடம் தங்க சங்கிலியை திருடர்கள் அறுத்து சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### மன்னார் மனிதப் புதைகுழி விவகாரம்

# மேலதிக அறிக்கையை சமர்ப்பிக்க கால அவகாசம் கோரல்

**மன்னார் குறூப் நிருபர்**





மன்னார் மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட எச்சங்கள் மற்றும் சான்றுப் பொருட்கள் தொடர்பான மேலதிக அறிக்கையை சமர்ப்பிக்க நீதிமன்றத்தில் மூன்று வாரகால அவகாசம் கோரப்பட்டுள்ளது.

சட்ட வைத்திய அதிகாரி மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் பேராசிரியர் ராஜ் சோமதேவ ஆகியோர் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

மனிதப் புதைகுழி அகழ்வுப் பணியை மேற்கொள்ள தேவையான காலம் தொடர்பிலும், ஏற்கனவே மீட்கப்பட்ட எச்சங்களை பிரித்தெடுத்து அறிக்கை தயார் செய்வதற்கான காலம் தொடர்பிலும் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கமைய, இவ்விடயம் தொடர்பான மேலதிக அறிக்கைகளை தயார் செய்ய மூன்று வாரங்கள் அவசியமாகும் என நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கோரிக்கைக்கு அமைய, மனிதப் புதைகுழி வழக்கை எதிர்வரும் மே மாதம் 20 ஆம் திகதி வரை மன்னார் நீதவான் ஒத்திவைத்துள்ளார்.

இதனிடையே, மன்னார் நீதவான் நீதிமன்றத்தின் வழக்கு விசாரணை தொடர்பான முன்னேற்ற அறிக்கை வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, வவுனியா மேல் நீதிமன்றத்தில், மன்னார் மனிதப் புதைகுழி வழக்கு நாளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

# விவாதப் போட்டியில் திறமையை வெளிப்படுத்திய வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவர்கள்





**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**

கொழும்பு வித்தியா விருத்திச் சங்கத்தின் எழுபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நிகழ்நிலையில் நடாத்தப்பட்ட விவாதப் போட்டியில் கலந்துகொண்டு, யாழ். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாவட்ட ரீதியிலும் மாகாண ரீதியிலும் முதலிடத்தை தட்டிச் சென்றது. பின்னர் அதன் இறுதிப் போட்டியானது கடந்த 23.04.2022 அன்று கொழும்பு – லோறன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த இறுதிப் போட்டியில் கலந்துகொண்டு கொழும்பு பம்பலப்பிட்டி இந்து பாடசாலை தேசிய ரீதியில் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டதுடன் யாழ். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தினை பெற்றுக்கொண்டது.

சி.கேசவன், ர.துலக்சன், இ.அஸ்வின், ந.பிருதிக்சா ஆகிய மாணவர்களே வட்டுக்கோட்டை இந்து கல்லூரி சார்பில் கலந்துகொண்டு யாழ். மண்ணிற்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பணப்பரிசு, சான்றிதழ்கள், நூற் பரிசு மற்றும் வெற்றிக்கேடயம் என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## இராணுவத்தினரால் புலோலியில் வீட்டுத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிவைப்பு

**கரவெட்டி தினகரன் நிருபர்**



பருத்தித்துறை புலோலி வடக்கில் குறைந்த வருமானம் பெறும் குடும்பமொன்றுக்கு இராணுவத்தினரால்

கொழும்பு றோயல் கல்லூரி பழைய மாணவர் விஸ் நடராசாவின் ரூபா 17 இலட்சம் நிதி உதவியின் கீழ் தங்கராசா தர்மாராணி குடும்பதினருக்கு வீடு ஒன்றினை கட்டிக் கொடுப்பதற்கு நேற்றைய தினம் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

அடிக்கல்லினை 551 ஆவது காலாட்படை படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சிந்தக விக்ரமசிங்க, பருத்தித்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர், பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் நாட்டிவைத்தனர்.





பூமணியம்மா அறக்கட்டளையினரால் அண்மையில் யாழ். மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 50 மாணவர்கள் கௌரவிப்பும் அவர்களது பெற்றோருக்கு உலருணவுப் பொதி வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது. பூமணியம்மா அறக்கட்டளைக்கான இலங்கைக்கான தலைவர் லயன் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையிலான குழுவினர் இந்நிகழ்வை நடத்தினர். இந்நிகழ்வில் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த அனுசரனையாளர்களும் கலந்து சிறப்பித்ததுடன் பிரதம விருந்தினராக முன்னாள் பிரதேச செயலாளர் செல்வினும் கலந்துகொண்டார்.

## தெருநாய் கடிக்குள்ளாகியவர் நீர் வெறுப்பு நோயினால் உயிரிழப்பு

**யாழ்.விசேட நிருபர்**

தெருநாய் கடிக்குள்ளாகிய குடும்பத் தலைவர் நீர்வெறுப்பு நோய்க்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

அவருக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி வழங்காது ஏற்பு ஊசி மட்டும் பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பண்டத்தரிப்பைச் சேர்ந்த சபாரத்தினம் கனகலிங்கம் (வயது 50) என்பவரே உயிரிழந்துள்ளார். பெப்ரவரி 16ஆம் திகதி குடும்பத்தலைவருக்கு தெரு நாய் கடித்துள்ளது. அவர் மறுநாள் காலை பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனைக்கு சிகிச்சை பெறச் சென்றுள்ளார். அவருக்கு மருத்துவரின் ஆலோசனையில் ஏற்பு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவர் கடந்த திங்கட்கிழமை திடீர் சுகயீனம் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சில மணிநேரங்களில் உயிரிழந்துள்ளதாக இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

# கிழக்கின் குரல்



# கிராமப்புற மக்கள் வைத்திய சேவையை பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்

## கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர்

(நிந்தவூர் குறூப் நிருபர்)



கிராமப்புறங்களில் வாழுகின்ற மக்கள் உரிய நேரத்தில் வைத்திய சேவைகளை பெறுவதில் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண PSDG இன் 15 மில்லியன் நிதியொதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட சீனக்குடா ஆரம்ப பராமரிப்பு வைத்திய நிலையத்தை மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு, செவ்வாய்க்கிழமை (26) திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி.ஜீ.எம்.கோஸ்த்தா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில் ;

நகர்ப்புறங்களில் வாழுகின்ற மக்கள் பெருமளவில் வைத்திய சேவைகளை மிக இலகுவாகப் பெற்று வருகின்றனர். ஆனால் கிராமப்புறங்களில் வாழுகின்ற மக்கள் உரிய நேரத்தில் வைத்திய சேவைகளை பெறுவதில் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மக்கள் ஆரோக்கியமுள்ளவர்களாக வாழவேண்டும் என்ற நோக்கில் அரசாங்கம் பல திட்டங்களை முன்வைத்து சகல முன்னெடுப்புக்களையும் முன்னெடுத்து வருகின்றது. கிராமப்புறங்களில் வாழுகின்ற மக்களின் காலடியில் வைத்திய சேவைகள் மிக இலகுவாக சென்றடைய வேண்டும் என்பதற்காகவே, ஆரம்ப பராமரிப்பு வைத்திய நிலையங்களை நிர்மாணித்து அங்கு வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களை நியமித்து வருகின்றோம் என்றார்.

இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர்.எம்.தௌபீக், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் உதவிப் பணிப்பாளர் வைத்தியர் மோகன குமரன், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி வி. குகேந்திரன், வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி திருமதி ஆர்.முஜீஸ் உள்ளிட்ட மாகாண திணைக்கள அதிகாரிகள், வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# உலர் உணவு பொதிகள் வழங்கி வைப்பு



(சாய்ந்தமருது விசேட நிருபர்)

சம்மாந்துறை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு, சம்மாந்துறையில் செவ்வாய்க்கிழமை (26) இடம்பெற்றது.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பொது மக்கள் எதிர்வரும் நோன்புப் பெருநாளை சிறப்பாகக் கொண்டாடும் முகமாக இவ் உலர் உணவுப் பொதிகள் மயோன் குரூப் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் றிஸ்லி முஸ்தபாவினால் வழங்கி வைக்கப்பட்டது.

இன் நிகழ்வில் மயோன் ஸ்டார் லைப் அமைப்பின் தலைவர் எம்.எம்.ரபீக், அமைப்பின் பெண்கள் பிரிவு தலைவி எம்.எம்.பாயிஸா உட்பட அமைப்பின் சம்மாந்துறை பொறுப்பாளர்களான எ.எம். பாரிஸ், ஷபி ஸையித் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஊடகவியலாளர் சிவராமின் நினைவு தினம் நாளை

(கல்லடி குறூப் நிருபர்)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் டி.சிவராமின் நினைவு தினத்தினை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை மட்டக்களப்பில் நினைவேந்தல் நிகழ்வும் கவன ஈர்ப்பு போராட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இந் நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு நகரில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்தப்பட்டு, அதனை தொடர்ந்து கவன ஈர்ப்பு போராட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிவேண்டியும் நாட்டில் இடம்பெற்றுவரும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அடக்குமுறையினை கண்டித்தும், தமிழ் மக்களின் உரிமையினை அங்கிகரிக்ககோரியும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந் நினைவேந்தல் நிகழ்வில் அனைத்து ஊடகவியலாளர்களையும்,பொது அமைப்புகளையும் அரசியல்வாதிகளையும் மனித உரிமை செயற்பாட்டாளர்களையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்குமாறு, மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு.ஊடக அமையம் என்பன சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## தொழில் முயற்சியாளர்களுக்கான தொழில் உபகரணங்கள் வழங்கல்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் கைத்தொழில் வாழ்வாதார தொழில் முயற்சியாளர்களுக்கான தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, செவ்வாய்க்கிழமை (26) காத்தான்குடி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய சிறீதர், உதவி பிரதேச செயலாளர் திருமதி எம்.எஸ்.சில்மியா உட்பட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு வாழ்வாதார தொழில் உப கரணங்களை வழங்கி வைத்தனர்.

இவ்வாண்டு வரவு செலவு திட்டத்தின் முன் மொழிவுக்கமைய கிராமத்துடன் கலந்துரையடலில் கிராம மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறு தொழில் முயற்சியாளர்களுக்கான வாழ்வாதார தொழில் உபகரணங்கள் தெரிவு செய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இதில் தையல் இயந்திரங்கள், எரிவாயு அடுப்பு, சமையல் எரிவாயு போத்தல்கள் போன்ற தொழில் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த திட்டத்துக்கமைய 40 வீதம் கிராமிய அபிவிருத்தி வாழ்வாதார தொழில் முயற்சியாளர்களுக்கு உதவுதல், 40 வீதம் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி, 20 வீதம் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## மட்டக்களப்பில் டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு

மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்குநோய் பரவல் அதிகரித்து வருகின்றது. கடந்த ஏப்ரல் 18 ஆந் திகதி தொடக்கம் 22 ஆந் திகதிவரையான காலப்பகுதியில் 24 பேர் டெங்குநோய் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர்.

இந்தவாரம் டெங்குதாக்கத்தினால் பாதிப்புக்குள்ளான மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 08 நோயாளர்களும், ஏறாவூர், கோரளைப்பற்று மத்தி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா 05 நோயாளர்களும், கிரான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 நோயாளர்களும், செங்கலடி, களுவாஞ்சிகுடி, வெல்லாவெளி மற்றும் ஒட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா ஒரு நோயாளர்களுமாக மொத்தம் 24 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இருப்பினும் கத்தான்குடி, வாழைச்சேனை, பட்டிப்பளை, வவுணதீவு, வாகரை மற்றும் ஆரையம்பதி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோயாளர்கள் எவரும் இனங்காணப்படவில்லை.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ் வருடத்தில் இதுவரை 307 பேர் டெங்குநோய்த் தாக்கத்திற் உட்பட்டுள்ளதாகவும், இதுவரை எவரும் மரணமடையவில்லை எனவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜீ. சுகுணன் மாவட்ட ஊடகப் பிரிவிற்கு தகவல் தெரிவித்தார்.

## மூதூரில் குரங்குகளால் தோட்ட பயிர்கள் அழிவு

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் வேதத்தீவு, சந்தன வெட்டை, குரங்குபாஞ்சான், உப்புக்காச்சிமடு, ஆலிம்சேனை மற்றும் ஜின்னா நகர் பிரதேச தோட்ட காணிகளில் இம்முறை பெருமளவில் பயிரிட்டுள்ள உள்ளூர் மரக்கறி பயிர்கள் குரங்குகளினால் தினமும் பெரும் அழிவுக்குள்ளாகி வருவதாக தோட்டக்காரகள் பெரும் கவலை தெரிவிக்கின்றனர். இக்குரங்குகள் அயலில் உள்ள ஆற்றங்கரை காடுகளில் இருந்து உணவு தேடி வந்து தோட்டத்துப் பயிர்களான மரவள்ளி, பயிற்றை, அவரை, பப்பாசி மற்றும் பல்லின மரக்கறி பயிர்களையும் தோட்டக் காணிகளுக்குள் கூட்டம் கூட்டமாக ஆக்கிரமித்து உண்டு அழித்துச் செல்கின்றன. இந் நிலையில் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கும் நாளாந்த பராமரிப்புகளுக்கு மத்தியிலும் மேற்கொண்டுவரும் இப்பயிரினங்கள் அழிவுற்று வருவது கண்டு பெரும் துயரப்படுகின்றனர்.

## பாலமுனை பிரதேசத்தில் காட்டு யானைகளால் தொல்லை

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)



அம்பாறை மாவட்டத்தின் பாலமுனை கமநல சேவைகள் பிரிவுக்குட்பட்ட பாலமுனை ஒலுவில், தீகவாபி பிரதேச வயல் நிலங்களில் நாளாந்தம் ஐம்பதுக்கு மேற்பட்ட காட்டு யானைகள் படையெடுப்பதால் இப்பிரதேச விவசாயிகள் பல இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

சிறுபோக விவசாயத்திற்காக வயல் நிலங்களை தயார்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் காலை வேளைகளில் தமது விவசாய நிலங்களுக்கு செல்லமுடியாதவாறு வயல் நிலங்கள் முழுவதையுமே காட்டு யானைகள் ஆக்கிரமித்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் வயல் நிலங்களுக்குள் உட்பிரவேசிக்கும் காட்டு யானைகள், விவசாயிகள் இளைப்பாறுவதற்காக அமைத்துள்ள ஓய்வு அரண்களையும் வயல் ஓரங்களில் காணப்படும் தென்னை மற்றும் நிழல் தரும் மரங்களையும் அழித்து துவம்சம் செய்து வருவதுடன், வயல் வரம்புகள் மற்றும் அணைக்கட்டுகளையும் சேதப்படுத்தி செல்கின்றன. சிறு போக வேளாண்மைச் செய்கைக்காக வயல் நிலங்களை உழும் நடவடிக்கைகளில் தற்பொழுது விவசாயிகள் ஈடுபட்டுவரும் நிலையிலேயே காட்டு யானைகளின் தொல்லை இவ்வாறு அதிகரித்து காணப்படுகின்றன.

விவசாயிகள் தமது உயிரை பணயம் வைத்தே விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

## தம்பலகாமத்தில் உலர் உணவு பொதிகள் வழங்கி வைப்பு

தம்பலகாமம் குறூப் நிருபர்



திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவை உள்ளடக்கிய தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (26) பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற இவ் உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வானது, சர்வோதய நிறுவனம், ஹேமாஸ் டயலொக் நிறுவனங்கள் இணைந்து சுமார் 2500 ரூபா பெறுமதியான 50 பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக ஒரு இலட்சம் உலர் உணவுப் பொதிகள் வழங்கும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ், குறித்த பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் விசேட தேவையுடையோர்கள், பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள், வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்கள் என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்காக இவை வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன், சர்வோதய நிலைய வடகிழக்கு பணிப்பாளர் வீ.ஜீவராஜ், டயலொக் நிறுவன பிராந்திய முகாமையாளர், சமூக சேவை உத்தியோகத்தர் ப.சுதன் மற்றும் பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## உதவி தொகை வழங்கி வைப்பு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கலைஞர்களுக்கான உதவி தொகை வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை (25) காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் கலைஞர்களுக்கு வழங்கப்படும் இந்த உதவிக் கொடுப்பனவு மூன்று கலைஞர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இதன் போது காத்தான்குடி பிரதேசத்திலுள்ள 3 கலைஞர்களுக்கு இக் கொடுப்பனவு வழங்கி வைக்கப்பட்டன. இதனை காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய சிறீதர் வழங்கி வைத்தார். இந் நிகழ்வில் காத்தான்குடி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## சிறார்களுக்கு பெருநாள் ஆடைகள்



கிண்ணியா நிருபர்

அஸீஸா பௌண்டேஷன் நிறுவனத்தினால் வறுமைக் கோட்டின் கீழுள்ள சிறார்களுக்கு பெருநாள் ஆடைகள் வழங்கும் நிகழ்வு, செவ்வாய்க்கிழமை (26) முள்ளிப்பொத்தானை பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வு முள்ளிப்பொத்தானை பாலிகா மகா வித்தியாலயத்தின் அதிபர் ஏ.எப்.லரீப் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக அஸீஸா பௌண்டேஷன் நிறுவனத்தின் தலைவர் ஸாதிக் ஹஸன் கலந்து சிறப்பித்தார்.

அஸீஸா பௌண்டேஷன் வறிய சிறார்களுக்கு பெருநாள் ஆடைகளை திருகோணமலை மாவட்டத்தில் பல பிரதேசங்களில் வழங்கி வருவதுடன், தொடர்ச்சையாக ஒவ்வொரு வருடமும் பெருநாளை முன்னிட்டும் இப்பணியை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



வை.எம்.எம்.ஏ பேரவைத் தலைமையகத்தினால் வழங்கப்பட்ட 6000 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் அண்மையில் நிந்தவூர் பிரதேசத்திலுள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. நிந்தவூர் YMMA தலைவர் ஏ.எல்.ஏ.றபீக் பிர்தௌஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், முன்னாள் உதவிச் செயலாளர் எம்.ஐ.உதுமாலெவ்வை, அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் எம்.ஐ.எம். றியாஸ், பாலமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று பிரதேசத் தலைவர்களும் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.



கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வின் போது. படம்; நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

## புதிய உறுப்பினர் ஹமீட்டுக்கு கௌரவம்

(பெரியநீலாவணை விசேட நிருபர்)

அப்துல் சமட் ஹமீட் கல்முனை மாநகர சபைக்கு தேசிய காங்கிரஸ் சார்பில் உறுப்பினராக நியமிக்கப்பட்டமையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (25) மருதமுனையில் இடம்பெற்றது. தேசிய காங்கிரஸ் கட்சியின் மருதமுனை இளைஞர் அமைப்பாளராகவும், அல் மீஷான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் மருதமுனை பிரதேச பிரதம இணைப்பாளராகவும் கடந்த பலவருடங்களாக சேவையாற்றி வரும் அப்துல் சமட் ஹமீட், சிறந்த சமூக சேவகராக மக்களினால் அறியப்பட்டவர். அதனை முன்னிட்டு அப்துல் சமட் ஹமீடை பாராட்டி கௌரவிக்கும் முகமாக மருதமுனை மருதம் விளையாட்டுக்கழகத்தினர் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி இதன்போது கௌரவித்தனர்.




# தொடர் மழையால் நீர்நிலைகளில் நீர் மட்டம் அதிகரிப்பு

## நீராடுவதை தவிர்க்குமாறு எச்சரிக்கை

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

மலையகத்தில் தொடரும் பெரும் மழை காரணமாக இப்பகுதியிலுள்ள நீர்நிலைகள் பெருக்கெடுத்து வருவதால் நீராடுவதை தவிர்த்து கொள்ளுமாறு பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் இப்பிரதேசவாசிகள் பொது மக்களை அறிவுறுத்துகின்றனர்.

பண்டிகைக் காலத்தில் இளைஞர்கள் இவற்றில் உல்லாசமாக நீராட வருவதால் ஆபத்துக்களில் சிக்கி உயிரிழப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன. எனவே இத்தினங்களில் இப்பிரதேச நீர்வீழ்ச்சிகள், ஆறுகள், குளங்களில் நீராடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு இவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



மேலும் இரத்தினபுரி வழியாக சிவனொளிபாத மலை செல்லும் யாத்திரிகர்கள் களுகங்கை உட்பட பல நீர்நிலைகளில் நீராடுவோர் கவனயீனம் காரணமாக உயிராபத்துக்களை எதிர்கொள்வதாக இரத்தினபுரி மாவட்ட நீர்வீழ்ச்சிகள் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தினூடாக சிவனொளிபாத மலைக்குச் செல்லும் 3 வீதிகளிலும் களுகங்கை வளவை கங்கையும் இவற்றின் கிளையாறுகளும் நீர்வீழ்ச்சிகளும் காணப்படுகின்றன. இவற்றின் நீரோட்டம் தற்போது அதிகரித்து வருவதால் பொது மக்களின் பாதுகாப்புக் கருதி அபாய அறிவுறுத்தல்களை இவர்கள் விடுத்து வருகின்றனர்.



பத்து தொழிற்சங்கங்கள் இன்று(28) நடாத்தவுள்ள வேலைநிறுத்தப் போராட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் பங்குகொள்ளுமென இலங்கை தொழிலாளர் காங்கிஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார். இது குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று கொள்ளுப்பிட்டியிலுள்ள இ.தொ.கா தலைமையகமான சௌமியபவனில் நடைபெற்றது. குறிப்பாக இன்றைய தினம் தொழிலாளர்கள் தங்கள் வேலைத்தலங்களில் கறுப்புப்பட்டி அணிந்து வேலை செய்யவுள்ளனர் எனவும் தெரிவித்தார். படம் கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்

# அக்குறணை ஐடெக் கல்வி நிலையத்தில் நோன்பு திறப்பு

**மாவத்தகம தினகரன் நிருபர்**



கண்டி மாவட்ட கல்வி அபிவிருத்தி அமைப்பின் ஏற்பாட்டில் நோன்பு திறக்கும் இப்தார் விசேட நிகழ்வு அக்குறணை ஐடெக் கல்வி நிலையத்தில் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஐ. ஜனூடீன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீட்சி பெற்று அமைதியான சூழல் நிலவுவதற்கு நோன்பாளிகள் பிரார்த்தனை செய்தனர். இந்நிகழ்வில் அக்குறணை ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் மௌலவி ஏ. எம். எம் சியாம் கலந்து கொண்டதுடன் விசேட துஆப் பிரார்த்தனையினை அக்குறணை ரஹ்மானிய அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி சாதீக் நிகழ்த்தினார்.உலமாக்கள் , முக்கிய பிரமுகர்கள் எனப் பலர் கொண்டனர்.

# ஹற்றனில் மண்ணெண்ணெய்க்கு நீண்ட வரிசையில் மக்கள் காத்திருப்பு

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர், ஹற்றன் சுழற்சி நிருபர்**

மலையகத்தில் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ள மக்கள் நீண்டநேரம் வரிசையில் காத்திருந்தனர்.

கொட்டகலை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் நிரப்புவதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர்.

நேற்று (27.04.2022) காலையிலிருந்து விநியோகிக்கப்பட்ட மண்ணெண்ணெயை பெற்றுக்கொள்ள நேற்று மதியம் பனிரெண்டு மணியை தாண்டியும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்துள்ளனர்.

இதில் ஹோட்டல்காரர்கள், விவசாயிகள், மற்றும் சமையல் மற்றும் இதர தேவைகளுக்காகவே மக்கள் இவ்வாறு நீண்ட வரிசையில் காத்திருந்து மண்ணெண்ணெய்யை பெற்றுகொள்கின்றனர்.

மின்வெட்டு மற்றும் எரிவாயு விலை உயர்வு காரணமாக சமைக்க மற்றும் வீட்டில் விளக்கு ஏற்றுவதற்கு மண்ணெண்ணெய் எடுத்துச் செல்வதாக அட்டன் மற்றும் கொட்டகலை சூழவுள்ள பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.





சிலர் நிற்க முடியாத சூழ்நிலையில் அந்தப்பகுதியில் தரையில் அமர்ந்து இருப்பதையும் காணக்கூடியதாக இருந்தது.

எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் இருந்து மண்ணெண்ணெய் வாங்க பிரதான வீதியின் ஓரத்தில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் வரை நீண்ட வரிசையில் மக்கள் நின்றிருந்தமை குறிப்பிடதக்கது.

இதேவேளை ஹற்றனில் சில வாரங்களின் பின்னர், நேற்றுமுன்தினம் பெரும் எண்ணிகையிலான வாடிக்கையாளர்கள் ஹற்றன் கொழும்பு பிரதான வீதியிலுள்ள சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் காத்திருந்ததாக தெரியவருகின்றது.

நேற்றுமுன்தினம் விநியோகிக்கப்பட்ட 6,600 லீற்றர் மண்ணெண்ணெயைக் கொள்வனவு செய்ய 2000ற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் வரிசையில் காத்திருந்துள்ளனர்.

ஹற்றன் பிரதேசத்தில் நிலவும் கடும் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மண்ணெண்ணெய் கொள்வனவு செய்ய வரிசையில் காத்திருப்பதாக பாவனையாளர்கள் தெரிவித்தனர்.

நேற்று பாடசாலை முடிந்ததும் மண்ணெண்ணெய் வாங்குவதற்கு ஆசிரியர்களும் வரிசையில் நின்றிருந்தனர். எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் தலா 500 ரூபாவுக்கு மண்ணெண்ணெய் வழங்க நடவடிக்கை எடுத்தனர்.

# தேசிய ஜனநாயக ஆசிரியர் சங்க எதிர்ப்பு நடை பயண ஆர்ப்பாட்டம்

தேசிய ஜனநாயக ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு நடை பயண ஆர்ப்பாட்டமொன்றை இன்று (28) காலை தலவாக்கலையில் நடத்தவுள்ளது.

"உச்சம் தொட்டுள்ள வாழ்க்கை செலவும், திண்டாடும் மக்களும்" எனும் தொனியில் நடைபயண ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தலவாக்கலை மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு முன்பாக காலை 09 மணியளவில் எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு ஹற்றன் நகரை நோக்கி ஆர்பாட்டக்காரர்கள் நடைபயணம் செல்லவுள்ளதாக சங்கத்தின் பொது செயலாளர் எஸ். பாலசேகரம் தெரிவித்தார்.

இதன்போது அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை கண்டித்து நடத்தப்படும் இந்த ஆர்ப்பாட்டப் பயணத்தில் தேசிய ஜனநாயக ஆசிரியர் சங்க உறுப்பினர்களுடன், பொதுமக்களும் கலந்து கொள்ள அழைப்பு விடுப்பதாக எஸ்.பாலசேகரம் மேலும் தெரிவித்தார்.

# பாடசாலை போக்குவரத்து சேவைகள் இடைநிறுத்தம்

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பாடசாலை மாணவர்களை அழைத்துச் செல்வதில் அவதான நிலைமை காணப்படுவதால் பெல்மதுளை, கஹவத்தை, இறக்குவானை மற்றும் கொடகவெல பகுதிகளுக்கு செல்லும் பாடசாலை போக்குவரத்து சேவை பஸ் மற்றும் வான்கள் சேவைகளை இடைநிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை மாவட்ட பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து சங்கத்தின் பெல்மதுளை கிளையின் செயலாளர் பீ.டப்ளியூ. நிமல் ஜயசிரி தெரிவித்தார்.

இரத்தினபுரி கஹவத்தை கொடகவெல ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற பொதுமக்களின் ஆர்ப்பாட்டத்தின் காரணமாக பாடசாலை மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாகினர். அத்தோடு தங்களது தொழிலினை நடத்திச் செல்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கிவருவதாகதெரிவிக்கின்றனர்.



அதேசமயம் எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக பாடசாலை போக்குவரத்து சேவையினை நடாத்துவதில் பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். எரிபொருள் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள போதிலும் பெற்றோர்களிடம் கட்டணத்தை அதிகரித்து வாங்க முடியாதுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே பாடசாலை பஸ்கள், வான்களுக்கு விசேட எரிபொருள் சலுகை ஒன்றினை பெற்றுத்தருமாறு உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# ஐக்கிய மக்கள் சக்தியின் பாத யாத்திரை

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்திற்கு எதிரான பாத யாத்திரை இரண்டாம் கட்டமாக நேற்று மாவனல்லையில் ஆரம்பிக்கப்பட்டது.

மலையக மக்களின் ஆயிரம் ரூபாய் சம்பள பிரச்சனை, தொழில் பாதுகாப்பு, தொழில் உரிமை தொடர்பாகவும் இதன்போது கோஷம் எழுப்பப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளரும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வடிவேல் சுரேஷ் ஆகியோர் பாதயாத்திரையில் கலந்து கொண்டிருந்தனர்.




# எரிபொருளுக்கு தட்டுப்பாடில்லை

நுவரெலியா மாவட்டத்தின் சகல நகரங்களிலும் உள்ள சிபெட்கோ மற்றும் ஐ.ஓ.சி ஆகிய நிறுவனங்களுக்குரிய எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு தேவையான டீசல் மற்றம் பெட்ரோல் என்பன போதியளவு கிடைத்து வருவதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

நுகர்வோருக்கு தேவையான எரிபொருள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் தடையின்றி விநியோகிக்கப்பட்டாலும் எரிபொருள் விலை அதிகரிப்பால் விற்பனையில் சிறிதளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை முன்னரைப் போன்று வரிசைகளில் காத்திருக்காமல் தமக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதாகவும் வாகன சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

# கெலிஓயா நகரில் ஆர்ப்பாட்டம்



**கம்பளை நிருபர்**

கண்டி கெலிஓயா நகரில் பொருட்கள் விலைவாசி அதிகரிப்புக்கு அரசை வெளியேறுமாறு கூறி பாரிய ஆர்ப்பாட்டமொன்று நடைப்பெற்றது. கெலிஓயா நகரில் அனைத்து வியாபார நிலையங்களும் மூடி வியாபார நிலைய உரிமையாளர்கள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர். கெலிஓயா பஸ் நிலையத்திற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்தனர். அதன்பின் கெலிஓயா நகரை சுற்றி பேரணியாக சென்று ஆர்ப்பாட்டம் நடந்தது. பதாதைகளையும் தேசிய கொடிகளையும் ஏந்தி கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டம் செய்தனர். இதில் அனைத்து வியாபார நிலைய உரிமையாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் இ.தொ.கா கலந்துரையாடல்!



நாட்டில் ஏற்பட்டுள்ள பண வீக்கத்தின் அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பின் அவசியம் குறித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமை காரியாலயமான சௌமிய பவனில்

தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையப் பிரதிநிதிகளுடன் விசேட கலந்துரையாடலொன்று இடம் பெற்றது.

கலந்துரையாடலில் இதொகாவின் தலைவர் செந்தில் தொண்டமான், பொது செயலாளர் ஜீவன் தொண்டமான் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய தொழிற்சங்க நடவடிக்கைகள் குறித்து இதன்போது ஆழமாக ஆராயப்பட்டது.

# பொறிமுறை மாற்றத்தை மேற்கொள்ள இடைக்கால அரசாங்கத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

*இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப்*

**இனவாதம், மதவாதம், குறுகிய தேசியவாதம் போன்ற பிற்போக்குவாத சிந்தனைகளால் ஒரு தேசத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்பதற்கு உலகில் காணப்படும் மிகச் சிறந்த உதாரணங்களில் இலங்கையும் ஒன்றாகும் என்பது எனது நீண்ட கால அபிப்பிராயமாகும். ஒற்றுமையுடன் அரசியல் சுயலாப நோக்கங்களை முதன்மைப்படுத்தாது ஒரு தேசமாக எழுந்து வீறுநடை போடுவதற்கு பல பொன்னான சந்தர்ப்பங்கள் வாய்த்த பொழுதும், குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட அரசியல் தலைமைகளால் அது சாத்தியப்படவில்லை.**

தேசிய நலனை குறிக்கோளாகக் கொண்ட சுபீட்சமிக்க எதிர்கால இலங்கையைக் கட்டியெழுப்பும் திட்டம் கொண்ட தூரதிருஷ்டி வாய்ந்த தலைவர்கள் நமது குறைவிருத்தி அரசியல் கலாசாரத்தில் எழுச்சி பெற வாய்ப்பில்லை என்பதை வரலாறு சொல்லி நிற்கிறது.

ஆட்சியில் இருக்கும் ஆளும் கட்சி கொண்டு வரும் திட்டங்களை எதிர்க்கட்சி நிராகரிப்பதும், ஆளும் கட்சி கொண்டு வந்து எதிர்க்கட்சியால் நிராகரிக்கப்பட்ட அதே திட்டம் மீண்டும் எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்ததும் கொண்டு வரப்படும் பொழுது ஆளும் கட்சியாக அப்பொழுது இருந்த தற்போதைய எதிர்க்கட்சி எதிர்ப்பதும் வாடிக்கையாகிப் போன நமது அரசியல் கலாசாரத்தில் எப்படி நாடும் நாட்டு மக்களும் அபிவிருத்தியடைய முடியும்?

இந்தக் கேள்வியை எனது அரசியல் பிரவேசத்தில் இருந்து இன்றுவரை நான் பதிவாக்கியே வந்திருக்கின்றேன். கட்சி அரசியலை விட தேசம் என முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு புதிய அரசியல் கலாசாரம் உருவாகாதா எனும் எனது நீண்ட அங்கலாய்ப்பு நிறைவேறும் தருணம் நாட்டில் எழுந்திருக்கும் எதேச்சையான மக்கள் எழுச்சியினால் உருவாகுமாக இருந்தால் அதற்கு என்னாலான அத்தனை அர்ப்பணிப்பினையும் வழங்குவதற்கு சித்தமாகவுள்ளேன்.



நாட்டில் தற்போழுது பேசுபொருளாகியிருக்கும் தேசிய அரசாங்கம் அல்லது சர்வகட்சி அரசாங்கம் எனும் கருத்தாடல் குறுகிய நலம் கொண்ட கட்சி அரசியல் பண்புகளை வெற்றிகரமாகக் கடந்து நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளையும் அரவணைத்து தேசிய அபிவிருத்தியினையும் நாட்டில் எழுந்திருக்கும் பொருளாதார சீரழிவினை வெற்றிகரமாக எதிர்கொள்வதனையும் இலக்காகக் கொண்டு சுபீட்சமிக்க எதிர்கால இலங்கையினை கட்டியெழுப்பும் திடசங்கற்பம் பூண்டதாக இருந்தால் அதற்கு என்னாலான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்குவதற்கு நான் தயார்நிலையிலேயே உள்ளேன்.

எப்படியாவது அதிகாரத்தினை அடைந்து கொள்ள வேண்டும் எனும் வேட்கை வாய்ந்ததாகவோ அல்லது யாரையும் புறக்கணிக்கும் நோக்கம் மிக்கதாகவோ அல்லது அரசியல் பழிவாங்கும் வைராக்கியம் மிக்கதாகவோ இடைக்கால அரசாங்கம் அமையாமல் நாட்டின் இக்கட்டான நிலைமை இல்லாமலாக்கி இந்த புதிய சூழ்நிலையை பயன்படுத்தி நாட்டின் பாரம்பரிய அரசியல் பொறிமுறையை உலகின் வெற்றிகரமான நாடுகளின் அரசியல் பொறிமுறை போல் மாற்றிய மைக்க பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே எனது அவா.

## தேசத்தின் உண்மையான பற்றாளர்கள் இதனையே விரும்புகின்றனர்

இந்தப் புனிதமான பணியினை இந்த தேசத்துக்காக செய்வதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்ற யார் முன்வருவார்களோ அவர்களே இந்த தேசத்தின் பற்றாளர்களாகக் கொள்ளப்பட வேண்டும்.


சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

WP ABA-5452 Bajaj 2015 Threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே. 0711 2 1 0810. 027856

வேலைவாய்ப்பு

312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

டிங்கர் பெயின்டர்கள் தேவை. சகல வசதிகளும் உண்டு. நுகேகொடை 0777252876 027023


# மனிதனுக்கு மனஉளைச்சல் தரும் பாரிய பிரச்சினை உறக்கமின்மை

**மனித வாழ்வில் மிக அத்தியாவசியமானது உணவு, உடை, உறையுள் என்பார்கள். அவற்றுடன் மிகவும் முக்கியமானது ஆரோக்கியமாகும். ஆரோக்கியம் சிறப்பாக இல்லாவிடின் மனித வாழ்க்கைக்கு அர்த்தமில்லாமல் போய் விடும்.**

'உடல் உள சமூக ஆத்மிக நன்னிலையே ஆரோக்கியம்' எனப்படும். 'உடல் பாதித்தால் மனம் பாதிக்கும், மனம் பாதித்தால் உடல் பாதிக்கும்' என்பது யாவரும் அறிந்த ஒரு விடயம். உதாரணமாக தற்போதைய நெருக்கடி மிகுந்த வாழ்க்கை காரணமாக சமூக பொருளாதார பிரச்சினை மாத்திரமன்றி உடல் சார்ந்த பிரச்சினைகளும் ஏற்பட்டுக் கொண்டிருப்பதை நாம் மறுக்க முடியாது. அவ்வாறே உடல் ஆரோக்கியத்தை பாதிக்கும் விடயங்களில் அதி முக்கியமானது நித்திரையின்மை ஆகும்.

மூளை மற்றும் உடல் உழைப்பை பயன்படுத்தி வாழ்கின்ற மனிதர்களுக்கு உடல் உள ஓய்வு மிக அவசியமானது. இதனை பல ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. மனிதனுக்கு தினமும் குறைந்தது ஆறு தொடக்கம் எட்டு மணித்தியாலங்கள் சீரான உறக்கம் மிக அவசியம்.

நித்திரையின்மை என்பது பொதுவாக வயது முதிர்ந்தவர்களில் ஏற்படும் ஒரு பிரச்சினையாகும். ஏனெனில் முதுமைக் காலத்தில் பொதுவாக மனச்சோர்வு, மனப்பதற்றம், மனக்கவலை போன்ற நிலைகள் அநேகமானோருக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாதது. ஆனால் தற்கால உலகில் இளையவர்கள் தொடக்கம் முதியவர்கள் வரை கூறும் விடயம் நித்திரையின்மை பிரச்சினையாகும். இப்பிரச்சினை பற்றிய வெளிப்படுத்தலானது ஒவ்வொருவருக்கும் வேறுபடுகின்றது.

உதாரணமாக, சிலருக்கு இரவில் நித்திரையானது அடிக்கடி குழம்பும், சிலருக்கு படுக்கையில் படுத்திருந்தாலும் நித்திரை உண்டாகாது. சிலருக்கு சரியான அளவு நித்திரை இல்லாமல் அதிகாலையில் எழுவர். சிலருக்கு நித்திரை ஏற்பட்டாலும் திருப்தியான நித்திரையாக இருக்காது. காலையில் எழுந்த பின்பும் மிகவும் சோர்வாகவும் களைப்பாகவும் உணர்தல் அல்லது பயம், மனக்கவலை, பதற்றம், கோபம் போன்றன காணப்படல்.

இதைத் தவிர, சிலர் அதிகரித்த வேலைப்பளு காரணமாக அல்லது பரீட்சைகளுக்கு தம்மை தயார் செய்வதற்காக அல்லது அதிகரித்த தொலைபேசி பாவனை, முகநூல் மற்றும் நவீன இணையத்தள பாவனை காரணமாக இயற்கையால் அருளப்பட்ட நித்திரை எனும் வரப்பிரசாதத்தை வீணடித்துக் கொண்டிருப்பதனால் வெகுவிரைவில் உடல் உள பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டும் என்ற உண்மையை உணரத்தான் வேண்டும். இந்நிலைமையை இலகுவாக சீரமைக்கலாம். ஒவ்வொருவரும் தமது வசதிக்கேற்ப நேர அட்டவணைப்படி தமது வேலைகளை முடிப்பதுடன் குறைந்தளவு ஆறு மணி நேர நித்திரையை கடைப்பிடிக்கலாம்.

வருடாந்தம் பங்குனி மாதம் 18 ஆம் திகதி 'உலக உறக்க தினம்' அனுசரிக்கப்படுகிறது. இன்றைய அவசரகால வாழ்க்கையில் தவிர்க்கப்படும் நித்திரையின் முக்கியத்துவத்தை உலக மக்களுக்கு தீர்மானமாக கூறுவதற்கான ஒரு வாய்ப்பாக இந்நாள் அமைகின்றது. இவ்வருடத்தின் கருப்பொருள் 'தரமான தூக்கம், நல்ல மனம், மகிழ்ச்சியான உலகம்' ஆகும்.

நித்திரையின்மையானது மன நோய்கள், வலியை ஏற்படுத்தக் கூடிய நோய்கள், மூட்டு நோய்கள், குருதிச்சோகை, ஆஸ்துமா, தைரொயிட் சுரப்பி அளவுக்கதிகமாக செயற்படுதல், இரத்தக் கொதிப்பு, சமிபாட்டுப் பிரச்சினை, போன்றவற்றால் ஏற்படலாம், மேற்குறிப்பிட்டவாறு முதுமைக்காலத்தில், அதிக குடிப்பழக்கம், புகை பிடித்தல், போதைப் பழக்கம், அதிக கோப்பி அருந்துதல், கடன்தொல்லை, அதிகரித்த வேலைப்பளு, விவாகரத்து, கணவன் அல்லது மனைவியை இழந்து தனிமையில் வாழல், பெற்றோரை இழத்தல், குடும்பத்தில் சிக்கல்கள், பயம், மனச்சோர்வு போன்ற மனத்தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய நிலைகளிலும் ஏற்படலாம்,

இவற்றைத் தவிர சீரற்ற படுக்கை, படுக்கையறையில் அதிக வெப்பம் அல்லது அதிக குளிர் காணப்படுதல், அருகில் அதிக இரைச்சல் அல்லது சத்தம் கேட்டல் போன்ற விடயங்களும் செல்வாக்கு செலுத்துகின்றன.



மேலும் நித்திரையின்மையால் தலைவலி, உடற்பருமன் அதிகரித்தல், மனச்சோர்வு, பக்கவாதம், மாரடைப்பு போன்ற தாக்கங்கள் ஏற்படலாம். இவை தவிர இரத்தக் கொதிப்பு, நீரிழிவு போன்ற போன்ற நோய்களும் திவிரமடையலாம். நித்திரைக் குறைவு காரணமாக மனித ஆயுள் குறைவடையலாம் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

எனவே நித்திரையின்மைக்கு உகந்த தீர்வுகளை கடைப்பிடிப்பதன் மூலம் உடல் உள ஆரோக்கியத்தை பேணலாம். இந்நிலைமை வேறு நோய்கள் காரணமாக அல்லது வேறு நோய்களுடன் சேர்ந்து ஏற்பட்டிருந்தால் அக்குறித்த நோய்களுக்கான தகுந்த மருத்துவ சிகிச்சை எடுத்தல் வேண்டும். அத்துடன் அம்மருந்துகளை தவறாது உள்ளெடுக்க வேண்டும்.

சரியான நித்திரைப் பழக்கவழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும். இதற்காக குறைந்தது ஆறு மணி நேர இடைவெளியில் நித்திரைக்குச் செல்வதற்கான நேரத்தையும், நித்திரை விட்டு எழுவதற்கான நேரத்தையும் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இந்நேர அட்டவணையை வார இறுதி நாட்களிலும் எக்காரணம் கொண்டும் மாறாதவாறு இயன்றளவு கடைப்பிடித்தல் வேண்டும்.

## அன்றாடம் கடைப்பிடிக்கின்ற வாழ்க்கை முறை, உணவுப் பழக்கம் ஆகியவற்றின் மூலமே சீரான உறக்கம் எமக்குக் கிடைக்கும்

காலையில் போதியளவு ஒழுங்கான உடற்பயிற்சிகளை மேற்கொள்ளல். இரவில் மற்றும் படுக்கைக்கு போக நான்கு மணித்தியாலங்களுக்கு முன்னராக உடற்பயிற்சி செய்வதை இயன்றளவு தவிர்க்க வேண்டும். ஏனெனில் அப்போது உருவாகும் அட்ரீனலின் சுரப்பு காரணமாக நித்திரை ஏற்படாது.

பகலில் கூடியளவு இயற்கை வெளிச்சத்தில் (சூரிய ஒளி) இருக்க பழகிக் கொள்ளல். பகலில் மற்றும் குறிப்பாக மாலையில் தூங்குவதை தவிர்க்க வேண்டும். படுக்கை அறை மிகவும் சுத்தமாகவும், நறுமணம் மிக்கதாகவும் இருக்க வேண்டும். இரவில் படுக்கையறையில் பிரகாசமான வெளிச்சத்தை தவிர்த்து இருளாகவும் அமைதியாகவும் இருக்க வேண்டும். சரியான வெப்பநிலை காற்றோட்டம் மற்றும் சீரான ஒலி பேணப்பட வேண்டும்.

உடலிற்கு ஏற்ற வகையில் படுக்கை மற்றும் தலையணைகள் பேணப்படல் அவசியம். குறைந்தது இரவு உணவு உள்ளெடுத்த நான்கு மணித்தியாலங்களின் பின்னர் நித்திரைக்கு செல்லல் சிறப்பு. நித்திரைக்கு செல்வதற்கு முன் துரித உணவுகள், பொரித்த உணவுகள், அதிக இனிப்பு, காரம் சேர்ந்த உணவுகளையும் மற்றும் அதிகமாக உணவுகளை உள்ளெடுத்தலையும் தவிர்க்க வேண்டும்.

இலகுவில் சமிபாடடையக் கூடிய உணவுகளை உள்ளெடுக்க வேண்டும். அதிகளவு நீர் அருந்தக் கூடாது. அத்துடன் மாலையிலிருந்து கோப்பி அருந்தக் கூடாது. மது அருந்துதலையும், புகை பிடித்தலையும் கட்டாயமாக தவிர்க்க வேண்டும்.

இரவு சாப்பிட்ட பின் சிறிது நேரம் நடைப்பயிற்சி செய்யலாம். நித்திரைக்கு செல்ல முன் இளஞ்சூடான நீரில் குளித்தல். நித்திரைக்கு முன்னராக மனதை அமைதிப்படுத்தக் கூடிய வகையில் தியானம், மூச்சுப்பயிற்சி மற்றும் ஆன்மீகம் சார்ந்த புத்தகங்களை வாசித்தல், பஜனைப் பாடல்களை அல்லது இசையை கிரகித்தல் போன்ற விடயங்களில் ஈடுபடலாம்.

இரவில் படுக்கைக்கு போக இரண்டு மணித்தியாலங்களுக்கு முன் கைபேசி மற்றும் மடிக்கணினி போன்றவற்றின் பாவனையை தவிர்க்க வேண்டும். ஏனெனில் இவற்றை ஆர்வத்துடன் பயன்படுத்துவதால் உறங்கும் நேரத்தில் இயற்கையாக சுரக்க வேண்டிய மெலரோனின் எனும் ஹோமோன் சுரத்தலானது தடைப்படுவதால் நித்திரை ஏற்படாது. அத்துடன் கைபேசி மற்றும் மடிக்கணினி போன்ற மின்உபகரணங்களை அணைத்து விட்டு படுக்கைக்கு வெகு தொலைவில் வைக்க வேண்டும்.

இவ்வழிகளால் கூட நிவர்த்திக்க முடியாத வகையில் நித்திரையின்மை பிரச்சினை தொடருமாயின் தகுந்த மருத்துவரை நாடி சிகிச்சை பெற வேண்டியது மிக அவசியம்.

மேற்கூறப்பட்ட வழிமுறைகளை சரிவரக் கடைப்பிடிப்பதன் மூலம் நித்திரையின்மை எனும் பூதத்தை விரட்டி நாமும் ஆரோக்கியமாக வாழ்ந்து மற்றவர்களையும் ஆரோக்கியமாக வாழ வழியமைக்கலாம்.



## கிரமமான நித்திரைப் பழக்கத்தை உருவாக்கிக் கொள்வதற்கான வழிவகைகள் எவை?


வைத்திய கலாநிதி
**செல்வி வினோதா சண்முகராஜா...**
*(சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவ அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

கலாநிதி
**திருமதி கௌரி ராஜ்குமார்...**
*(சிரேஷ்ட விரிவுரையாளர், தாவரவியல் துறை, விஞ்ஞான பீடம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)*



## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**வெதரால வெல்னஸ் இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிட்டட்**

கம்பனி பதிவிலக்கம்:
**PV 00256411**

கூட்டிணைப்புத் திகதி:
**2022.04.21**

பதிவு முகவரி:
**இல. 129B, புளதிசிஹெலவெதமெதுர வத்துபிட்டிவல, நிட்டம்புவ**

**(Ms) ரஜனி பாலகிருஷ்ணன்**
**கம்பனி செயலாளர்**

## இலங்கை புகையிரத சேவைகள்
## பெறுகை அறிவித்தல்

**PROCUREMENT FOR THE SUPPLY OF BASE PLATES, FISH PLATES, COACH SCREWS AND BOLTS & NUTS TO SRI LANKA RAILWAYS**

**PROCUREMENT No.: SRS/F.7823**

01. கீழே காட்டப்பட்டவாறு சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் அடிப்படையில் இலங்கை புகையிரத சேவைகளுக்கு OF BASE PLATES, FISH PLATES, COACH SCREWS AND BOLTS & NUTS ஆகியவற்றின் வழங்கல் பெறுகைக்காக வெளிநாட்டு உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார். விலைமனுதாரர் அவர்களின் விலைமனுக்களை நேரடியாக அல்லது இலங்கையில் பதிவு பெற்ற அற்றோணித்தத்துவத்தையுடைய தரஅங்கீகாரம் பெற்ற முகவரொருவரினூடாகவும் சமர்ப்பிக்கலாம்.

| Item No. | Description | Qty |
|---|---|---|
| 01. | Base Plates 90 (A) Lbs | 5,000 Nos. |
| 02. | Fish Plates 90(A). (04 holed) | 4,000 Nos. |
| 03. | Stud Bolts with Nuts | 5,000 Nos. |
| 04. | Coach Screws | 20,000 Nos. |
| 05. | Fang Bolts & Nuts – 8 ½" x ¾" | 10,000 Nos. |

02. 2022.06.15 ஆம் திகதியன்று (இலங்கை நேரம்) பி.ப. 3 மணி வரையும் 10,250 இலங்கை ரூபாவை மாத்திரம் அல்லது இலகுவில் மாற்றக்கூடிய நாணயத்தில் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக செலுத்திய பின்னர் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலயங்களிலிருந்து பெறக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
03. 2022.06.16 ஆம் திகதியன்று இலங்கை நேரம் பி.ப. 1.30 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும்.
04. விலைமனுதாரர்அவர்களின் விலைமனுக்களின் ஒரு பகுதிக்காக 400,000 ரூபா பெறுமதியான அல்லது இலகுவில் மாற்றக்கூடிய நிகரான தொகைக்கான விலைமனுபிணையொன்றை வழங்கல் வேண்டும். உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள் சர்வதேச போட்டிரீதியிலான, அமைப்பினால் வழங்கப்படும் செயற்பாட்டு சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும். அனைத்து அம்சங்களும் ஒன்றாகவே மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்படும்.
05. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
06. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**பிரதி பொது முகாமையாளரின் அலுவலகம் (பெறுகை),**
**ஒல்கட் மாவத்தை, கொழும்பு-10.**

07. விலைமனுக்கோரல் ஆவணங்கள் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்கலாம்.

**தொலைபேசி இலக்கங்கள்:** 2438078/2436818
**தொலைநகல் இலக்கம்** 2432044
**மின்னஞ்சல்:** tender2@railway.gov.lk
**இணையதளம்:** www.railway.gov.lk

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**இலங்கை புகையிரத சேவைகள்**

**Ref. No.: SRS/F.7823**

# சாதாரண தர மாணவர்களுக்கு இலவச விஞ்ஞான கருத்தரங்கு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**



க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு இவ்வருடம் (2022) தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச விஞ்ஞான பாட கருத்தரங்கு புத்தளம் கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றது.

புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம். ரபீக்கின் வழிகாட்டலின் கீழ், நகர சபையின் ஏற்பாட்டில் இக்கருத்தரங்கு இடம்பெறுகிறது.

கருத்தரங்கை அங்குரார்ப்பணம் செய்து வைத்து அங்கு உரையாற்றிய நகரபிதா, கொரோனா பெருந்தொற்றுக் காரணமாகவும் தற்போதைய பொருளாதார நெருக்கடியாலும் பாதிக்கப்பட்டிருக்கும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளின் மீள் எழுச்சிக்கான உந்து சக்தியாக இவ்வாறான இலவச கருத்தரங்குகள் அமைகின்றன. தனது தலைமையிலான நகரசபை, மறைந்த தலைவர் மர்ஹூம் கே.ஏ.பாயிஸின் வழியில் கல்வி வளர்ச்சிக்கான வேலைத் திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்கிறோம். கணிதப் பாடத்துக்காகவும் விரைவில் இவ்வாறான இலவச கருத்தரங்கை நடாத்த உத்தேசித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் சுமார் 450 க்கும் அதிகமான மாணவர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. தேர்ச்சி பெற்ற வளவாளர்களான ஏ.எம். நஜீப், என்.எம்.நப்ராஸ் ஆகியோர் இணைந்து விஞ்ஞான கருத்தரங்கை திறம்பட நடாத்தினர்.

கருத்தரங்கில் பங்குபற்றிய மாணவர்கள் இவ்வாறான கருத்தரங்கு தமக்கு மிகுந்த பயனுள்ளதாக அமையப் பெற்றதையிட்டு நகரபிதாவுக்கு தமது நன்றிகளைத் தெரிவித்தனர்.




கொழும்பிலுள்ள ஐக்கிய அரபு எமிரேட்ஸின் தூதரகம், ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள தொண்டு மற்றும் நலன்புரி அமைப்புகளுடன் இணைந்து, இலங்கை மக்களுக்கு பயனளிக்கும் வகையில் ரமழான் மாதத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை செயல்படுத்துகின்றன. ஸாயெட் தொண்டு நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட உலர் உணவுப் பொதிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில், ஏழை குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.



## விலைமனுக்கோரல்

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

**விலைக்கேள்வி இலக்கம்: 023/T/2022**

**கொழும்பு சர்வதேச ரத்மலான விமான நிலையத்திற்கு ஒரு MOBILE (TOWABLE) ELECTRIC SPIDER BOOM LIFT வழங்குவது தொடர்பாக.**

ரத்மலானயில் அமைந்துள்ள, கொழும்பு சர்வதேச விமான நிலையம் மற்றும் இலங்கை விமான சேவைகள் நிறுவனத்திற்கு ஒரு Mobile (Towable) Electric Spider Boom Lift வழங்குவதற்காக இலங்கை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தனியார் லிமிட்டட் நிறுவனத்தின் தலைவர் ஏலம் அழைக்கப்படுகிறார்.

சப்ளை சங்கிலி மேலாண்மை விமான நிலையம் மற்றும் இலங்கை விமான சேவைகள் (பிரைவெட் லிமிட்டட்) பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் கட்டுநாயக்க ஆகிய பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் மூலம் திருப்பிச் செலுத்தப்படாத ஆவணக் கட்டணமாக ரூபா 3000/= கட்டணத்துடன் ஏலத்தாரர் வழங்கிய அதிகாரபூர்வ கோரிக்கை கடிதத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஏல ஆவணங்கள் சப்ளை சங்கிலி மேலாண்மை விமான நிலையம் மற்றும் இலங்கை விமான சேவைகள் (பிரைவெட் லிமிட்டட்) பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் கட்டுநாயக்க அலுவலகத்திலிருந்து 2022.04.28 ஆந் திகதி முதல் 2022.05.24 ஆந் திகதி காலை 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணிவரை எந்த ஒரு வேலை நாட்களிலும் பெற்றுக்கொள்ள முடியும். ஏல ஆவணங்கள் மேற்கண்ட முகவரியில் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

ஏலம் டிபசிட் செய்வதன் நோக்கத்திற்காக சப்ளை சங்கிலி மேலாண்மை விமான நிலையம் மற்றும் இலங்கை விமான சேவைகள் (பிரைவெட் லிமிட்டட்) பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் கட்டுநாயக்க அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடவேண்டும். ஏலதாரர்கள் விரும்பினால், அவர்கள் தனிப்பட்ட முறையில் சீல் வைக்கப்பட்ட ஏலங்களை மேலே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு ஒப்படைக்கலாம்.

2022.05.25ஆம் திகதியன்று மதியம் 2.00 மணிக்கு ஏலம் மூடப்படுவதுடன் உடனடியாகவே திறக்கப்படும். ஏலம் திறக்கும் நேரத்தில் ஏலதாரர்கள் அல்லது அவர்களின் முறையாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சப்ளை சங்கிலி மேலாண்மை விமான நிலையம் மற்றும் இலங்கை விமான சேவைகள் (பிரைவெட் லிமிட்டட்) பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் கட்டுநாயக்க அலுவலகத்திற்கு வரலாம்.

இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு இலங்கை வங்கியின் உத்தரவாதத்தின் வடிவில் பெறப்பட்ட இலங்கை ரூபாய்க்கு சமமான ஒரு லட்சத்து எழுபத்தி இரண்டாயிரத்து ஐந்நூறு (172,500.00) ரூபாவுக்கான பிட் பாண்ட், தலைவர், விமான நிலையம் மற்றும் இலங்கை விமான போக்குவரத்து சேவைகள் (பிரைவட்) லிமிட்டட், செலுத்தக் கூடிய வகையில் ஏலத்துடன் சமரப்பிக்கப்பட வேண்டும்.

மேலதிக தகவல் தேவையாயின் சப்ளை சங்கிலி மேலாண்மை விமான நிலையம் மற்றும் இலங்கை விமான சேவைகள் (பிரைவெட் லிமிட்டட்) பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் கட்டுநாயக்க பிரிவை தொலைபேசி இல. 011-2264103/ 2264102, மின் அஞ்சல் : head-scam@airport.lk அல்லது எமது வெப் சைட் www.airport.lk மூலம் தொடர்பு கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

## ஜா-எல பிரதேச சபை

**2022.06.01 முதல் 2022.12.31 வரை ஜா-எல பிரதேச சபைக்கு சொந்தமான இறைச்சிக்கடை,**

**ராகம பொது மலசலகூட அமைப்பு, ராகம வார சந்தை மற்றும் ராகம வாகன நிறுத்துமிடத்தை குத்தகைக்கு விடுவதற்காக கேள்வி கோரல் அறிவித்தல்**

ஜா-எல பிரதேச சபைக்குச் சொந்தமான ராகம மற்றும் கந்தான ஆகிய உப அலுவலக பிரதேசங்களில் அமைந்துள்ள கீழேயுள்ள உப அட்டவணைகளில் குறிப்பிடப்படும் சபைக்குச் சொந்தமான இறைச்சிக்கடை, ராகம பொது மலசலகூட அமைப்பு, ராகம வார சந்தை மற்றும் ராகம வாகன நிறுத்துமிடங்கள் குத்தகைக்கு விடுவதற்காக (2022.06.01 முதல் 2022.12.31 வரையான காலத்திற்கு) பொறியிடப்பட்ட கேள்விகள் 2022.05.17 மு.ப. 10.00 வரை என்னால் ஏற்கப்படும்.

குறித்த கேள்விப் படிவங்களை, கேள்விப் படிவக் கட்டணமான ரூ. 5000.00 மற்றும் மீளளிக்கப்படாத ரூ. 10000.00 கட்டணத்தை செலுத்திய பின்னர் 2022.05.13 பி.ப. 3.00 வரை ஜா-எல பிரதேச சபையின் கந்தானையில் அமைந்துள்ள தலைமையகத்தில் பெற்றுக்கொள்ளலாம். குறித்த கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் 2022.05.17 மு.ப. 10.00 இற்கு முடிவடைவதுடன் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் நகல் பிரதி மற்றும் அசல் பிரதியென வேறுவேறாக உறைகளில் இட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு 2022.05.17 மு.ப. 10.00 இற்கு முன்பு செயலாளர், ஜா-எல பிரதேச சபை கந்தான என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

தாமதமாகக் கிடைக்கும் அல்லது பூர்த்தியற்ற கேள்விப் பத்திரங்களை நிராகரிக்கும் முழுமையான உரிமை ஜா-எல பிரதேச சபையின் தலைவருக்கு உரியது,

கேள்விகள் சமர்ப்பிக்கும் முறைமை மற்றும் சகல அறிவுரைகளும் கேள்விப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:**
**011-2239566, 011-2232501**

**தலைவர்,**
**ஜா-எல பிரதேச சபை**
**கந்தானை.**

**2022.04.08**
**ஜா-எல பிரதேச சபை தலைமையகத்தில்.**

**அட்டவணை**

| தொடர் இல. | விபரம் | கேள்விப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணை வைப்பு தொகை (ரூ) | குறைந்தபட்ச கேள்வி (ரூ) |
|---|---|---|---|---|
| 01 | ராகம பொதுச் சந்தை இல. 02 மாட்டிறைச்சி கடை | 5000.00 | 17,500.00 | 350,000.00 |
| 02 | ராகம வாரசந்தை | 5000.00 | 36,458.00 | 729,166.00 |
| 03 | ராகம பொது மலசலகூட அமைப்பு | 5000.00 | 26,979.00 | 539,583.00 |
| 04 | ராகம வாகன நிறுத்துமிடம் (07 நாட்களுக்கு) | 5000.00 | 22,750.00 | 455,000.00 |
| 05 | ராகம வாகன நிறுத்துமிடம் (05 நாட்களுக்கு) | 5000.00 | 10,500.00 | 210,000.00 |

## பொது அறிவிப்பு

**நிறுவனத்தின் நிலை மாற்றம்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 11(5) இன் படி பதிவு அலுவலகம் இல 4A 1/1 கேர்ணல் டி ஜி ஜயவர்தன மாவத்தை, கொழும்பு 03, இல் அமைந்துள்ள **ADL கெப்பிட்டல் லிமிடெட் (PB 3822)** இனை, 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி நடைபெற்ற அசாதாரண பொதுக் கூட்டத்தில் சட்டத்தின் 29 ஆம் பிரிவின்படி தனியார் நிறுவனமாக சட்டத்தின் பிரிவு 11(2) இன் படி வரையறுக்கப்பட்டுள்ளதன்படி **ADL கெப்பிட்டல் பிரைவேற் லிமிடெட்** ஆக மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது என்பதை அதன் பங்குதாரர்களுக்கு அறியத்தருகிறோம்.

எஸ்ஜே கோப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டெட் காரியதரசிகளின் உத்தரவின்படி

## பொது அறிவிப்பு

**நிறுவனத்தின் நிலை மாற்றம்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 11(5) இன் படி பதிவு அலுவலகம் இல 4A 1/1 கேர்ணல் டி ஜி ஜயவர்தன மாவத்தை, கொழும்பு 03, இல் அமைந்துள்ள **ADL அஸெட் மனேஜ்மென்ற் லிமிடெட் (PB 3890)** இனை, 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி நடைபெற்ற அசாதாரண பொதுக் கூட்டத்தில் சட்டத்தின் 29ஆம் பிரிவின்படி தனியார் நிறுவனமாக சட்டத்தின் பிரிவு 11(2) இன் படி வரையறுக்கப்பட்டுள்ளதன்படி **ADL அஸெட் மனேஜ்மென்ற் பிரைவேற் லிமிடெட்** ஆக மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது என்பதை அதன் பங்குதாரர்களுக்கு அறியத்தருகிறோம்.

எஸ்ஜே கோப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டெட் காரியதரசிகளின் உத்தரவின்படி

## பொது அறிவிப்பு

**நிறுவனத்தின் நிலை மாற்றம்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 11(5) இன் படி பதிவு அலுவலகம் இல 4A 1/1 கேர்ணல் டி ஜி ஜயவர்தன மாவத்தை, கொழும்பு 03, இல் அமைந்துள்ள **ADL சக்வெட்டீஸ் லிமிடெட் (PB 4624)** இனை, 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி நடைபெற்ற அசாதாரண பொதுக் கூட்டத்தில் சட்டத்தின் 29 ஆம் பிரிவின்படி தனியார் நிறுவனமாக சட்டத்தின் பிரிவு 11(2) இன் படி வரையறுக்கப்பட்டுள்ளதன்படி **ADL சக்வெட்டீஸ் பிரைவேற் லிமிடெட்** ஆக மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது என்பதை அதன் பங்குதாரர்களுக்கு அறியத்தருகிறோம்.

எஸ்ஜே கோப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டெட் காரியதரசிகளின் உத்தரவின்படி

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

## விலைமனு அழைத்தல்

**சுகாதார அமைச்சு**

**மாகாண பொது வைத்தியசாலை - பதுளை**

பதுளை மாகாணப் பொது வைத்தியசாலையின் பெறுகைக்குழுத் தலைவரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களிற்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக் கோரப்படுகின்றது.

| தொடர் இலக்கம் | விலைமனு இலக்கம் | வழங்கல்கள் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் ரூபா | மீளளிக்கப் படும் விலைமனுப் பிணையம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | PGHB/AF/01/2022 | Preventive & Corrective Maintenance & Services of Piped Medical Gas Distribution System at the Provincial General Hospital - Badulla for the Year 2022/2023, 2023/2024 and 2024/2025 | - | 1,500.00 | 30,000.00 |
| 02 | PGHB/AF/02/2022 | Elevator Maintenance and Repair Services for the Year 2022 at Provincial General Hospital - Badulla | 09 | 3,000.00 | 10,000.00 |

02. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் (NCB) முறைமையினடிப்படையில் விலைமனுக் கோரப்படும்.
03. இதற்கான மேலதிக விபரங்களை வார வேலை நாட்களில், அலுவலக நேரங்களில் கணக்காளரை அழைத்து (நீடிப்பு 11.03) அல்லது கீழ்க்காணப்படும் வைத்தியசாலையின் இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
04. இதற்காகத் தகைமை பெற்றுள்ள விலைமனுதாரர்கள், வலைமனு ஒன்றிற்காக மீளளிக்கப்படாத மேற்படி படிவக் கட்டணத்தை வார வேலை நாட்களில் மு.ப. 09.00 முதல் பி.ப. 03.00 வரை வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவில் செலுத்தி, 2022.04.28 முதல் 2022.05.11 வரை தேவையான விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
05. விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக. விண்ணப்பக்கடிதமொன்றுடன், ஒவ்வொரு உபகரணத்திற்குமாக தனித்தனியான, கம்பனிகள் பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகள் கண்டிப்பாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
06. பூரணப்படுத்தி முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2022.05.12 அன்று பி.ப. 2.30 இற்கு முன்னர் பதுளை மாகாணப் பொது வைத்தியசாலைக்குப் பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது நேரடியாகப் பெறுகைப் பெட்டியிற் சேர்ப்பதற்கு முடியும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். அன்றைய தினம் பி.ப. 02.30 இற்கு விலைமனுத் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அனுமதிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
07. விலைமனு தொடர்பான இறுதித்தீர்மானம் எடுக்கும் உரிமை, பதுளை மாகாணப் பொது வைத்தியசாலையின் பிராந்திய பொது வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**மாகாணப் பொது வைத்தியசாலை, பதுளை**

**தொலைபேசி இலக்கம்: 055-2222261**
**தொலைநகல் இலக்கம்: 055-2231205**
**மின்னஞ்சல்: info@badullapgh.org**
**இணையதளம்: www.badullapgh.org**

## மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

**சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சு**

**சுகாதார சேவைகள் திணைக்களம்**

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் – மாத்தளை**

மாத்தளை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2022ஆம் வருடத்தில் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | மருத்துவ உபகரணங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | Ultra Sound Scanner for ICU & Surgical Purpose | 01 |
| 02 | Diathermy | 01 |

01. விலைமனுதாரர்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள மருத்துவம் சாராத உபகரணங்களை வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்கள் 2022-04-27ஆம் திகதி முதல் 2022-05-17ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையில் எம். சீ. வீதி, மாத்தளை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் வழங்கப்படும்.
02. விலைக்கோரல் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு பட்டியலுக்கு மீளளிக்கப்படும் 3000.00 ரூபா தொகையை மாத்தளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திணைக்களத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. உங்களால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களுடன் மொத்தப் பெறுமதியின் 2% விலைக்கோரல் பிணைமுறியொன்றை இலங்கை மத்திய வங்கியில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் மாத்தளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்.
04. விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியாக முறையாகப் பூர்த்தி செய்து வெவ்வேறு உறைகளில் இட்டு பின் அவைகளை வேறொரு உறையில் இட்டு அவ்வுறையில் இடதுபக்க மேல் மூலையில் மருத்துவம் சாராத உபகரணங்களை வழங்குதல் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
05. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022 மே மாதம் 18ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து மாத்தளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். இதில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு இந்த தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். 066-2222326/2222734
06. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022-05-12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மாத்தளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

**தலைவர், பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**மாத்தளை.**
**2022-04-27ஆம் திகதி.**

## பெயர் மாற்றம்

பொத்துவில் P19, கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் கணபதிப்பிள்ளை தவராசா ஆகிய நான் இன்று தொடக்கம் (27-4-2022) சுயவிருப்பின் பேரில் எனது பெயரை 'கணபதிப்பிள்ளை உபைதுல்லா' என மாற்றுகிறேன் என்பதை இத்தால் இலங்கை சனநாயக குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**- கணபதிப்பிள்ளை உபைதுல்லா**

## பெயர் மாற்றம்

சம்மாந்துறை வீரமுனை 01 உடையார் குளத்து வீதி இல. 89/C பிறப்பிடமாகக் கொண்டு தற்போது இல. 29 மலையடிக்கிராமம், சம்மாந்துறை எனும் முகவரியில் வதியும், இராஜேந்திரன் துஷியந்தன் ஆகிய நான் புனித இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு எனது பெயரை இராஜேந்திரன் முகம்மது இர்ஷாத் என பெயர் மாற்றிக்கொண்டேன் என்பதை இலங்கை ஜனனாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**இராஜேந்திரன் முகம்மது இர்ஷாட்**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.



கெப்பித்திக் கொல்லாவ கல்வி வலயத்துக்குட்பட்ட ஹொரவப்பொத்தானை அங்குநொச்சிய அல்மாஸ் வித்தியாலயத்தில் 14 மாணவர்கள், தரம் ஐந்து புலமைப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். பாடசாலை அதிபர் ஏ.ஜே.எம் தௌபீக்குடன் சித்தியடைந்த மாணவர்கள் எடுத்துக் கொண்ட படம்.



தர்மசக்தி அமைப்பு ஏற்பாடு செய்த இன நல்லிணக்க இப்தாரில் கலந்து கொண்டோர்...

# ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் தேவஸ்தான நூதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்





வத்தளை, மாபோல பங்களாவத்த அருள்மிகு ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் தேவஸ்தான நூதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் வியாழக்கிழமை காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ மணி ஸ்ரீநிவாச சிவாச்சாரியார் மற்றும் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ சு. கோபாலகிருஷ்ணா குருக்கள் வத்தளை பாலசுப்பிரமணிய குருக்கள், மற்றும் முன்னாள் பிரதியமைச்சர் புத்திரசிகாமணி, வத்தள மாபோள சபை உறுப்பினர் விஜயகுமார் ஆகியோரை படங்களில் காணலாம். (படங்கள்: ஏ. கே. விஜயபாலன்)

## இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/ PT/04/051 | 7920 KGS. Of Grease EP-2 | 94,500.00 | 1,000.00 | 2022.05.19 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/ PT/17/059 | 500M. of 35MM² CU/XLPE/ PVC 4 Core Power Cable | 45,000.00 | 1,000.00 | 2022.05.19 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குநராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2022 ஏப்ரல் 29 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

## இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/ PT/09/018 | இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு மனித வளங்கள் தகவல் முறைமைக்கான வடிவமைப்பு வழங்கல், அமுல்நடாத்தல், இடம்பெயர்தல் ஒருங்கிணைப்பு மற்றும் பராமரிப்பு. | 200,000.00 | 3,500.00 | 2022.05.13 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குனராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2022 ஏப்ரல் 29 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**

## இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/ PT/01/051 | 30 Nos. 1200 X 20 18PR Motor Tyres for Mitsubishi FD 150 Fork Lift Trucks | 40,000.00 | 1,000.00 | 2022.05.19 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குநராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2022 ஏப்ரல் 29 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

## இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/21/ PT/08/055 | Spares for Hino Boom Truck | 18,000.00 | 1,000.00 | 2022.05.20 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/22/ PT/03/051 | Bearing Housing for Spin Turn Device of Mitsui RTGS at JCT – 06 Nos. | 50,000.00 | 1,000.00 | 2022.05.20 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

